தொழிலாளன்

V3 · No. 23 5 Jan: 1930

SL
[illegible],M128KN
M30.3.23
189107

248

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ஹு ஜூன் மீ 5உ [No. 23.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 441
2. அப்பர் (யுத்தக்கலை)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 443
3. குறுந்தொகை (பாட்டு 83—86)
K. இராமரத்நம் ஐயர் B. A. 445
4. நம்மாழ்வார் வைபவம் (1 பத்து—5 பதிகம்)
K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 447
5. மானத சாத்திரம் (நடத்தை)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B L. 448
6. தமிழ்ப்பாடம் (கிருஷ்ணன் தூது) 451
7. இலஞ்சிப் பாவை (மேகநாதன்.)
T. S. நடராஜபிள்ளை. B A., B.L 453
8. கம்பராமாயணம் (மந்திரப் படலம்)
T. N. சேஷாசலம் B. A., B. L. 455
9. வர்த்தமானம் 457

## கலாநிலயம்

### கல்லாத பேர்களே நல்லவர்களோ!

- SEP 1930 81767

I

சிலநாட்களுக்கு முன் எமது நண்பரொருவரோடு உரையாடி யிருக்கையில், பதினாயிரத்தி லொருவருக்கும்மேல் படித்திருக்கப் படாதென்று மனுதர்ம சாஸ்த்திரம் விதித்துளதென அவர்கூறினர். கல்வியையும் அறிவையும் தமக்கே உரிய தனி யுடைமையாகத் தம் கைக்குள் வைத்துக்கொண்டு மற்றவர்களை அடக்கி ஆள்வதற்கென்று அக்காலப் பிராமணர்கள் செய்துவந்த சூழ்ச்சிகளில் இதுவும் ஒன்று என்ற உதாரணமாக அந்நண்பரால் இது எடுத்துக் காட்டலாயிற்று. அக்கால அந்தணர்தம் பெருமையையேனும் அவர்களைத் தூற்றுவோர் தம் தொழில் தன்மை முதலியவைகளையேனும் ஆராய்ந்து வாதிப்பது இக்கட்டுரையின் கருத்தன்று. மனுவனைய மேன்மையோர்தம் தகவும் வாய்மையும் தம்மையே காத்துக்கொள்ளக் கூடியவைகளாதலால் பிறர்சென்றதனைக் காக்கமுயல்வது அன்பினால் நிகழ்வதேனும் பேதைமையே பெரிதுடையது. ஒருவர் கூறியதையே ஒவ்வொருவரும் கூறிக்கூறி ஆரவாரஞ்செய்யுமினத்தைச் சேர்ந்தவர்களா லல்லாமல், பன்னூற் கல்வியும் தெளிந்த கேள்வியும் தெருண்ட சிந்தையும் ...தறநின்ற ஒழுக்கங்களும் உடைய மேலோர் ...ல் மனுநீதி பழிக்கப்பெற்றதுமில்லை. ஆதலின், மனுவினுக்குக் குறையொன் றெய்தியதென் றெவர் எண்ணுவார்!

பதினாயிரத்தில் ஒருவர்தான் படித்திருக்க வேண்டுமென்ற விதி மநுதர்மசாஸ்திரத்தில் இருக்கின்றதோ இல்லையோ என்பது எமக்கு நிச்சயமாய்த் தெரியாது. அந்நூலை யாம் இக்கட்டுரை எழுதுங்கால் ஒருமுறை விரைவில் பார்த்தோமெனினும் அவ்வாக்கியம் எமது கண்ணிற்குத் தென்படவில்லை. இவ்வாக்கியமும் விதியும் வகுத்திருப்பினும் மநுநீதி அதனால் வஞ்சனையு மழுக்காறு முடையவொரு பார்ப்பனச் சூழ்ச்சியாகாதென்பதை உணர்ந்தாற் போதும். இவ்வாக்கியம் மநுநூலுள் வந்திருப்பது வாய்மையாயின், அந்நூலின் நடுநிலைமைக்கும் தத்துவ உணர்ச்சிக்கும், அநுபவ அறிவிற்கும், நன்மையை நாடும் நாட்டத்திற்கும் சான்று வேறுசில தேடவேண்டா. பதினாயிரத்திலொருவர் படித்திருப்பதே நாட்டினது நன்மைக்கு ஏற்றதொரு நிலையாகும். "இப்படியுங் கலாநிலயம் கூறுவதோ" எனச் சிலர் வியக்கலாமெனினும், எம் தலையங்கங்களைத் தொடர்ச்சியாய் ஓதி உணர்ந்து வந்திருப்பவர், உலகமலைவு இதுவென மதியார் எனுந் துணிவு எமக்குளது. வேறெதுவும் விழைவதின்றிக் கலைபொதிந்த கல்வியிலேயே ஆண்பெண் அடங்

கலுந் தோய்ந்த சிந்தையராய் இருப்பதா லல்லாமல் இவ்வுலகம் உய்யும்வகை வேறிலதென்று தன்னுலியன்ற வன்மையெலாங் கொண்டு வற்புறுத்திவருங் கலாநிலயம் இன்று இவ்வாறு கூறுவது முரணுடை மொழிபோல் தோன்றுமெனினும், ‘படிப்பு’ என்ற சொல் பயில்கின்ற கருத்திற்கும், ‘கல்வி’ என்ற கருத்திற்குரிய நிலைமைக்கும் உள்ள வேற்றுமையை உய்த்துணர்ந்தால், பின் எமது உரை ஐயத்திற் கிடமின்றித் தெளிந்து நிற்கும். இவ்வேற்றுமையைப் பல்வேறு இடங்களில் பல்வேறு வகையாகக் குறிக்கவும் விளக்கவும் இவ்விதழ்களுள் நேர்ந்திருக்கின்றனவாதலால் மீண்டு மவைகளை இங்கு விரித்துரைத்தல் மிகை. ஆயினும், நினைவிற்கிங்குக் கொணரற் பாலதொன்றுளது. எழுதவும் படிக்கவும் பயின்றவர்கள் பதினாயிரம் பேரெனின் அவர்களில் கல்விமான் என்ற பெயரிற்குரியவராய் முதிர்கின்ற உத்தமர் எத்தனை பேர். எழுதப் படிக்கத் தெரிந்து கொள்வது மாத்திரமன்றி முழுப்படிப்பும் ஆயிற்றென்னு மறிகுறியாய், பி. ஏ. முதலிய பட்டங்கள் பெற்றவர்களிலுந்தான் கல்விநலச் செல்வர்கள் என்பதற்குரியார் அகப்படுவது அரிதினு மரிதாய்க் கிடக்கின்றதே.

நூல்பல ஆய்ந்துணர்வதால் வந்தெய்து மறிவு எத்தகையதென்பதைமுன் “அறியாமை வேண்டப்படும்” என்னுந் தலைப்புடைய கட்டுரைகளில் வரைந்திருக்கின்றோம். தன்னுடைய அறியாமையின் அளவைத் தெரிந்துகொள்வதே கல்வி கேள்விகளின் முடிவென ஸாக்ரடீஸ் முதலிய வித்தகர் நிறுவிய கொள்கையை மறத்தலாகாது. அறியாமையால் யாதுந் தீதில்லை. அறியாதானொருவன் அறிந்ததாய்ப் பாவித்து விவகரிப்பதாற்றான் அவனுக்கும் பிறர்க்கும் அளப்பரிய தீமைகள் விளைகின்றன. வேற்றூர்போகப் புறப்பட்டவனொருவன், அவ்வூர் இருக்குந்திசையும் அதற்குச் செல்லும் வழியும் அறியாதவனாயினும், தனக்கு அவை தெரிந்தில வென்னும் நினைவினோடு நடப்பானாயின், எதிர்ப்பட்டோரை யெல்லாம் வினவி வினவிச் செல்வானாதலின் வழிதப்பியலையாமல் நேராகத் தான் கருதியவூர் சென்றடைவான். மற்று வழியுந் திசையுந் தெரியாதானொருவன், அஃதவன் அறியாமையை அறியாமல் வழியறிந்த பாவனையில் போவானெனின் அவன் எத்துணை இடர்பட்டு உழல்வானென் றியம்பவேண்டுமோ! வழிதனக்குத் தெரியாதென்றுணர்ந்து எதிர்வருமொரு வனைவினவுங்கால், அவன் தனக்குத் தெரியாதிருக்குமாயின் ‘அறியேன்’ என்றுரைக்காமல் அறிந்தவன் போல் பாவித்துக் காட்டுவானாயின் அவ்வழி தப்புவழியாய் முடிந்து இடர்செய்யவும் நேர்கின்றது.

படிப்பெழுத்துத் தெரியாதவர்களிடத்தில் தமக்கு யாதுந்தெரியா தென்றவோர் உணர்ச்சி இயற்கையாயிருக்கின்றது. இதனால் இவர் ஆன்றோர் உரைகளையும் தம் மனச்சாக்ஷியையும் பின்பற்றிப் பெரும்பாலும் நன்னெறி பிறழாமல் ஒழுகுகின்றனர். வீரமே பிறப்பியற்கையா யுடைய ஆண்மையோரைக் “கல்லா மறவர்” எனப் புறப்பொருள் வெண்பாவொன்று புகழும். அவ்விதமே இவர்களைக் “கல்லா அறவோர்” என அழைப்பினுந் தகும். நாலெழுத்து எழுதவும் படிக்கவுந் தெரிந்தவுடன், பள்ளிக்கூடத்திலும் முட்டித்தட்டிப் பத்துவகுப்புக் கடந்தும் விட்டால், மக்களில் எண்ணிறந்தோர் தம் அறியாமையை அறவே மறந்துவிடுகின்றனர். ஆங்கில அறிஞர் ஆஸ்கார் வைல்ட் என்பவர் நுண்ணிதின் உணர்ந்துரைத்தவண்ணம் உலகத்திலுள்ள அறியாமையையெல்லாம் அறிவென்று திரட்டித்தரும் வர்த்தமானப் பத்திரிகைகள் விலைக்கு விற்கும் சொற்களையே வேதவாக்கிய மெனக்கொண்டு பற்பலர் அறிவிற்கு எல்லைக்கல் தாங்களே என மதிக்கலாகின்றனர். இதன்மேல் என்! அறியாமையை அறியாததால் சூழ்கின்ற அல்லல்களெல்லாம் அவர்களைத் தொடர்ந்து நடக்கின்றன. வழியல்லா வழியே நடந்து வாழ்நாளை அலைக்கின்றனர். தாம் அலைவது மல்லாமல் எதிர்ப்பட்டோரையெல்லாம் அலையவும் வைக்கின்றனர். உலகம் இன்றைக்கிருக்கும் இழிந்த நிலைக்கெல்லாம் இவர்களே காரணம். அறியாமை உளதென்றிருந்த நினைவு நீங்கிற்றேயன்றி மீண்டு மவ்வறியாமையை உணர்ந்து அடங்குதற்குரிய கல்வியினது அகலமும் ஆழமும் எழுதப் படிக்கப் பயின்றபேரனைவர்க்கும் வாய்ப்பதில்லை. இது வாய்க்கவேண்டுமென்பது போதிப்பவர்க்குந்தானேது. சர்வகலாசாலைகளின் சிந்தனைக்கு மெட்டாத செய்தி இது. பதினாயிரத்தி லொருவனே படிக்கப்புகுவானாயின், அவன் நன்னிலைவந்தால் வரலாகும் நலமொன்று கிடைக்குமே யன்றி, எஞ்சிய ஒன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பதுபேர் கெட்டழியாது தம் இயற்கையால் காக்கப்பெற்று, அல்லலில்தாம் படாமலும் மற்றவரைத் தள்ளிப்படுத்தாமலும் வாழ்வாராதலால் இம்முறையினுண்மை உற்று நோக்கி ஆய்ந்துணர்ந் தறிதற் குரியதேயாகும்.



# அப்பர்

## 8. அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்

### 7. யுத்தக்கலை அல்லது சங்கிராம விலக்கணம்.

[424-வது பக்கத் தொடர்ச்சி]

பாடாண்டிணை.

வாள் மங்கலம்:—

விழுநீர் மழுவாட்படை யண்ணல் விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந்த குரங்கணின் முட்டம்
தொழுநீர் மையர் தீதுறு துன்பமிலரே.
சம்பந்தர்.

ஆறேறு செஞ்சடையெம் மாரூ ரன்கா
ணன்பன்கா ணணிபழன மேயான் றன்கா
ணீறேறி திழறிகழு மேனி யான்கா
ணிருபன்கா ணிகரொன்று மில்லா தான்காண்
கூறேறு கோடுமழுவாட் படையி னான்காண்
கொக்கரையன் காண்குழுநற் பூதத் தான்காண்
மாறுய மதில்மூன்று மாய்வித் தான்காண்
மாகடல்சூழ் கோகரண மன்னி னானே.
திருக்கோகரணம் - திருத்தாண்டகம் 4.

மண்ணுதல் புரிந்த மண்ணு மங்கலம்:—

ஆகத்தோர் பாம்பசைத்து வெள்ளே றேறி
யணிகங்கை செஞ்சடைமே லார்க்கச்சூடிப்
பாகத்தோர் பெண்ணுடைய ரானு மாவர்
பசுவேறி யுழிதருமெம் பரம யோகி
காமத்தா லைங்கணையான் றன்னை வீழக்
கனலாக வெரிவிழித்த கண்மூன் றினார்
ஓமத்தா னன்மறைக ளோத லோவா
வொளிதிகழு மொற்றியூ ருறைகின் றாரே.
திருவொற்றியூர் - திருத்தாண்டகம் 2.

ஓம்படை நிலை (உருவகம்):—

மின்னுருவ விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கா றன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்
தன்னுருவின் மூன்றாய்த்தாழ் புனலி னான்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச
மன்னுருவை வான்பவளக் கொழுந்தை முத்தை
வளரொளியை வயிரத்தை மாசொன் றில்லாப்
பொன்னுருவைப் புள்ளிருக்கும் வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள் போக்கி னேனே.
திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருத்தாண்டகம். 5

புறநிலை வாழ்த்து:—

காத்த னேபொழி லேழையுங் காதலால்
ஆத்த னேயம ரர்க்கயன் றன்றலை
சேர்த்த னேதிரு வீழிமி ழலையுள்
கூத்த னேயடி யேனைக்கு றிக்கொளே.
திருவீழிமிழலை - திருக்குறுந்தொகை 6.

கொடிநிலைச் செய்யுள்:—

சடையேறு புனல்வைத்த சதுர னாருந்
தக்கன்றன் பெருவேள்வி தகர்த்திட் டாரும்
உடையேறு புலியதண்மே லாகங் கட்டி
யுண்பலிக்கென் றூரூரி னுழிதர் வாரும்
மடையேறிக் கயல்பாய வயல்கள் சூழ்ந்த
மயிலாடு துறையுறையு மணாள னாரும்
விடையேறு வெல்கொடியெம் விமல னாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே.
திருவெண்ணியூர் - திருத்தாண்டகம் 4.

சோவினை* யழித்த துளவணி மாயோன்
மேவரு விறலினை வியந்த கந்தழி:—

வீரமிக் கெயிறு காட்டி விண்ணுற நீண்ட ரக்கன்
கூரமிக் கவனைச் சென்று கொன்றுடன் கடற்படுத்துத்
தீரமிக் கானி ருந்த திருவிரா மேச்ச ரத்தைச்
சோரமிக் கார்த வத்தாற் கூடுவார் குறிப்பு ளாரே.
திருவிராமேச்சுரம் - திருநேரிசை 5.

எரிசுடர் வேலர்க்கு இளகிய உள்ளத்
தரிமலர்க் கண்ணிய ராடிய வள்ளி:—
(உ - ம்) திருவேதிகுடி - திருவிருத்தம்.

கையது காலெரி நாகங் கனல்விடு சூலமது
வெய்யது வேலைநஞ் சுண்ட வரிசை விண்ணவர்கோன்
செய்யினி னீல மணங்க மழுந்திரு வேதிகுடி
ஐயனை யாரா வமுதினை நாமடைந் தாடுதுமே!

வருத்தனை வாளரக் கன்முடி தோளொடு பத்திறுத்த
பொருத்தனைப் பொய்யா வருளனைப் பூதப் படை [யுடைய
திருத்தனைத் தேவர்பி ரான்றிரு வேதி குடியுடைய
அருத்தனை யாரா வமுதினை நாமடைந் தாடுதுமே.

விரும்பிய தரூஉம் விண்ணவர் தம்முழை
அரும்பெறற் புதல்வரை ஆற்றுப் படுத்தல்:—

மண்ணுலகும் விண்ணுலகு மும்மதே யாட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியா
னெம்பெருமானிதுதகவோ? இயம்பியருள்செய்யீர்
திண்ணெனவென் னுடல்விருத்தி தாரீரே யாகிற்
றிருமேனி வருந்தவே வளைக்கின்றே னாளைக்
கண்ணறையன் கொடும்பாட னென்றுரைக்க வேண்டா
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே. சுந்தரர்.

போற்றரு மிறைக்கெதிர் புகழ்ந்தனர் பரவல்:—
(உ - ம்) போற்றித் திருத்தாண்டகம் பதிகங்கள்:—

பொறையுடைய பூமி நீரானாய் போற்றி
பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சி னிடையாய் போற்றி
நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி!

விரிசுட ரேழிக்கு மேனி வானவனைப்
படுபயன் கருதிப் பழிச்சினர்ப் பணிதல்:—

முறிப்பான பேசி மலையெடுத்தான் றானு
முதுகிறமுன் கைந்நரம்பை யெடுத்துப் பாடப்

* சோ என்பது வாணாசுரன் நகராகும் - இதனடியிற் குறித்த உதாரணத்தில் இராவணன் இலங்கை யழித்தகதை உள்ளடங்கும்.

பறிப்பான்கைச் சிற்றரிவா ணீட்டி னானைப்
பாவியே னெஞ்சகத்துப் பாதப் போது
பொறித்தானைப் புரமூன்று மெரிசெய் தானைப்
பொய்யர்களைப் பொய்செய்து போது போக்கிக்
கிறிப்பானைக் கீழ்வேளூ ராளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே.
திருக்கீழ்வேளூர் - திருத்தாண்டகம் 10.

மருமலர்க் கோதை மடவர றலைவனை
விரிமலர்த் தாமம் விழைந்த கைக்கிளை:—

மண்ணை யுண்டமால் காணான் மலரடி
விண்ணை விண்டயன் காணான் வியன்முடி
மொண்ணை மாமரு தாவென்றென் மொய்குழல்
பண்ணை யாயமுகந் தானும் பயிலுமே.
திருவிடைமருது - திருக்குறுந்தொகை 9.

அல்லிடை விரும்பா தவன்முயக் கமர்ந்து
செல்பவள் செல்வகை தெரிந்த பெருந்திணை:—

புற்றினில் வாழு மரவுக்குந்
திங்கட்குங் கங்கையென் னும்
சிற்றிடை யாட்குஞ் செறிதறு
கண்ணிக்குஞ் சேர்விடமாம்
பெற்றுடை யான்பெரும் பேச்சடை
யான்பிரி யாதெனையாள்
விற்றுடை யாளொற்றி யூருடை
யான்றன் விரிசடையே.
திருவொற்றியூர் - திருவிருத்தம் 6.

வில்லேர் நுதலி விறலோன் மார்பம்
புல்லேம் யாமெனப் புலந்த புலவி:—

திங்க டங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள்
கணபதி யேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார்கோற் றட்டி யாளார்
உங்க ளுக்காட் செய்ய மாட்டோ
மோண காந்தன் றளியு ளீரே. சுந்தரர்.

படிமிசை யியங்காப் பணிமொழி மகளிர்
கடவுளை நயந்த கடவுட் பக்கம்:—

சித்தர் கன்னியர் தேவர்க டானவர்
பித்தர் நான்மறை வேதியர் பேணிய
அத்த னேகமை யாளுடை யாயெனும்
பத்தர் கட்கன்பர் பாலைத்து றையரே.
திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை 5.

பூதலத் தரிவையர் போருவில் வானவரைக்
காதலித் துரைத்த கடவுட் பக்கம்:—

மின்னி னுண்ணிடைக் கன்னியர் மிகவெங்கும்
பொன்னி நீர்மூழ்கிப் போற்றி யடிதொழ
மன்னி நான்மறை யோடுபல் கீதமும்
பன்னி னாவர் பாலைத் துறையரே
திருப்பாலைத்துறை - திருக்குறுந்தொகை 3.

இழையணி மங்கைய ரிறல காமங்
குழவி மருங்கிற் கூறிய பகுதி.

பாரொடு விண்ணும் பகலு மாகிப்
பனிமால் வரையாகிப் பரவை யாகி
நீரொடு தீயு நெடுங்காற்று மாகி
நெடுவெள் ளிடையாகி நிலனு மாகித்
தேரோட வரையெ டுத்தவ ரக்கன்
சிரம்பத் திறுத்தி ருமசெய் கையெல்லாம்
ஆரொடுங் கூடா வடிகே ளிதுவென்
னடியோ மூமக்காட் செயவஞ் சுதுமே.
சுந்தரர்.

நீங்காக் காதன் மைந்தரும் மகளிரும்
பாங்குக் கூடும் பதிநிலை யுரைத்தல்:—

மாதா பிதாவாகி மக்க ளாகி
மறிகடலு மால்விசும்புந் தானே யாகிக்
கோதா விரியாய்க் குமரி யாகிக்
கொல்புலித்தோ லாடைக் குழக னாகிப்
போதாய மலர்கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பறுக்கும் புனித னாகி
யாதானு மெனநினைந்தார்க் கெளிதே யாகி
யழல்வண்ண வண்ணர்தா நின்ற வாறே.
நின்ற திருத்தாண்டகம் 7.

ஒழிபு.

மேற்கூறுது ஒழிந்தனவும் கூறிய திணைகளிடத்து இயைவனவாகிய பொதுவும், புறப்பொருள் ஒழிபு எனப் பகரப்படும். அவைகளை அறுபத்திரண்டுதுறைகளாய் இலக்கணவிளக்கம் காட்டும். அவற்றில் சில தேவாரவாயிலாய் உதாரணங்கள் காட்டலாகும்.

வேம்புச் செய்யுள்:—

வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீர்த்தீர்
விருத்தினு னுமைவேண்டத் துருத்திபுக்கங்கிருந்தீர்
பாம்பினொடு படர்சடைக ளவைகாட்டி வெருட்டிப்
பகட்டநா னொட்டுவனோ பலகாலு முழன்றேன்
சேம்பினொடு செங்கழுநீர் தண்கிடங்கிற் றிகழுந்
திருவாரூர் புக்கிருந்த தீவண்ணர் நீரே
காம்பினொடு நேத்திரங்கள் பணித்தருள வேண்டும்
கடனாகைக் காரோண மேவியிருந் தீரே. சுந்தரர்.

சூது வென்றி:—

ஆயமுடையது நாமறியோ மரணத் தவரைக்
காயக் கணைசிலை வாங்கியு மெய்துந் துயக்கறுத்தான்
தூயவெண் ணீற்றினன் சோற்றுத் துறையுறை வார் [சடைமேல்
பாயும்வெண்ணீர்த்திரைக்கங்கையெம்மானுக்கழகிய
திருச்சோற்றுத்துறைத் திருவிருத்தம் 7 [தே

பிடி வென்றி:—

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.
சம்பந்தர்

முளைக்கைப்பிடி முகமன்சொலி
முதுவேய்களை யிறுத்துத்
துளைக்கைக்களிற் றினமாய் நின்று
சுனைநீர்களைத் தூவி
வளைக்கைப்பொழி மழைகூர்தர
மயின்மான்பிணை நிலத்தைக்
கிளைக்கமணி சிந்துந்திருக்
கேதாரமென் னீரே. சுந்தரர்.

## தற்கால யுத்தக்கலைக்கும் புராதனத் தமிழர் யுத்தக் கலைக்கு முள்ள வித்தியாசங்கள்.

தற்காலத்தில் நடக்கும் யுத்தத்தை அரக்கர்செய்த மாயப் போர்களுக்கு ஒப்பிடலாமேயன்றி அது,அறம்



பொருளென்னும்இயல்புடையதாய்ப்புறம்பயில்ஒழுக்கமான புறத்திணையில் வாராது.மறைந்து, எதிரி ஏமாறும்படி செய்து அவன் நிராயுதனாயிருக்கும் சமயத்தில் அவன்பேரில் ஆயுதப் பிரயோகம்செய்வது சுத்தவீரன் இலக்கணமன்றென நமது முன்னோர் கடிந்தனர். இந்திரஜித்து செய்த மாயப்போர் தோல்வியடையுமாறு நமது நவீன நாகரிகப்போர்கள் ஏற்பட்டிருக்கின்றனவே யன்றி, வாய்மை, தீரம், பெருந்தன்மை முதலியகுணங்களைவிருத்திசெய்பத்தக்கதன்மையைவளர்க்கும் கலையொன்று இருபதாம் நூற்றாண்டின்யுத்தங்களிற் காணப்படவில்லை.யுத்தக்கலையென்பதே இக்காலத்திலில்லை. அது விளையுந்தலத்தில் நேர்வது பெருங்கொலை; சட்டக்கொலையெனினும் பொருந்தும். தேச தேசப் பொது ஆட்சியர்(International Tribunal) நமதுமுன்னோர் யுத்தக்கலையைஆராய்ந்து சட்ட திட்டங்கள் ஏற்படுத்துவாராயின், மரித்துக்கிடக்கும் புறப்பொருட்கலை உலகில் விளங்கிப் புருடலட்சணங்களை வெளியாக்கும். இக்கால யுத்தவீரர்களை நமது முன்னோர் புருடரென்றே கூறார். ஏனெனின் இவர்களுக்கு வாய்மையுமில்லை, தூய்மையுமில்லை, நேயமுமில்லை. கொலையாளிகளான மறவராய்க் கொலைத்தொழிற்குக் கூலிபெறும் கொடியராய் இராணுவத்தில் அமர்ந்து மனிதத்தன்மை மறந்து காட்டு மிருகங்கள்போல் பெரும்பாலும் திகழ்வர். இதனடியிற் காணும் போர்வீர இலக்கணத்திற்கும் இக்காலத்திய போர்வீரத் தன்மைக்கும் யாதேனும் ஒற்றுமையுண்டோவென அறிஞ ராராய்க:—

மறுத்தானை மலைகோத்தங் கெடுத்தான் றன்னை
மணிமுடியோ டிருபதுதோ ளெரியக் காலால்
இறுத்தானை யெழுநரம்பி னிசைகேட் டானை
யெண்டிசைக்கும் கண்ணானைச் சிரமே லொன்றை
அறுத்தானை யமரர்களுக் கமுதீந் தானை
யாவர்க்குந் தாங்கொணா நஞ்ச முண்டு
பொறுத்தானைப் புண்ணியனைப் புநிதன் றன்னைப்
பொய்யிலியைப் பூந்துருத்தி கண்டே னானே.
திருப்பூந்துருத்தி - திருத்தாண்டகம் 10.

# குறுந்தொகை.

[427-வது பக்கத் தொடர்ச்சி]

வெண்பூதனார்] 83 [குறிஞ்சி

தலைவியின் தமர், அவளைத் தலைமகன் வரைந்து கொள்ளற்கு உடன்பட, அவ்வரைவின்பொருட்டுப் பொருள்வயிற் பிரிந்த அவன் வரைவொடு வருதலைச் செவிலியால் உணர்ந்த தோழி அவளை வாழ்த்தி அதனைத் தலைவிக்கு அறிவித்தது.

அரும்பெற லமிழ்தம் ஆர்பத மாகப்
பெரும்பெய ருலகம் பெறீஇயரோ அன்னை,
தம்மிற் றமதுண் டன்ன சினைதொறுந்
தீம்பழந் தூங்கும் பலவின்
ஓங்குமலை நாடனை வருமென் றோளே.

(உரை). தமது வீட்டின்கண் ணமர்ந்திருந்து, தமது முயற்சியால் ஈட்டிய பொருளைக்கொண்டு வேண்டிய துப்புரவுகளையெல்லாம் நுகர்தாற்போன்ற, கிளைகள் தோறும் இனிய பழங்களைத் தாங்கும் பலாமரங்களையுடைய உயர்ந்த மலைநாடனாகிய தலைமகன் (வரைவொடு) வருவான் என்று எனக்குரைத்த கினது அன்னை, 'சொர்க்கம்' என்னும் பெரிய பெயரைப்பெற்ற மேலுலகில் பெறுதற்கரிய அமிர்தத்தையே உண்ணு முணவாகப் பெறுவாளாக.

ஆர்பதம் - (வினைத்தொகை) உண்ணும் உணவு, பதம் - சோறு. பெரும் பெய ருலகம் - துறக்கம். அன்னை - ஈண்டு செவிலித்தாய். தம்மிற் றமதுண்டன்ன நாடன்' என இசைக்க. தலைமகளை வரைந்துகொண்டு தன் மனையுற்று இல்லறங்களை இனிதாற்றி வாழ்வான் என்ற கருத்தால் அவனைத் 'தம்மில் நாடன்' என்றான். 'வரும்' - என்றது, வரைவுக்குவேண்டிய பொருளோடும், பிற வரிசைகளோடும் தனது சுற்றத்தாருடன் வருதலை.

தன்னால் உண்மையையுணர்ந்து பிறகு மெல்ல அதனை நற்றாய்க் கறிவித்து அவளைக்கொண்டு தந்தைமுதலாயினாரையும் உடன்படுவித்துச் செவிலித்தாய் நன்மணம் முடித்தாளாதலின், அவளைத் தோழி இவ்வாறு வாழ்த்தினாளென்க. இச்செய்தி ''காமர் கடும்புனல்' என்ற இரண்டாங் குறிஞ்சிக்கலியில் அழகுபெறக் கூறப்பட்டிருத்தலைப் படித்தறிந்து இன்புறுக.

இறைச்சி:—''சினைதொறும் தீம்பழந் தூங்கும் பலவின் மலைநாடன்'' என்றமையால் தலைமகன், மணந்து இன்புறுதற்குரிய மகளிர் பலரிருப்பினும், அவர்களிடத்துத் தன் அன்பைச் செலுத்தாது தலைமகளையே தன் மனத்துக்கினிய மணமகளாகக்கொண்ட அவனது நற்பாலைப் பாங்கி வியந்து பாராட்டினாள் என்க.

---

மோசிகீரன்] 84 [பாலை

தலைமகன் தலைமகளை உடன்கொண்டுசென்றதை அறிந்த செவிலித்தாய், கொடிய சுரத்திடைச் செல்லவல்லள் அல்லளாகிய தலைமகளினது மெல்லியலைக் குறித்து வருந்தியது.

பெயர்த்தனென் முயங்கயான் வெயர்த்தனெ னென்
இனியறிந் தேனது துனியா குதலே; [றனள்;
கழறொடி யாஅய் மழைதவழ் பொதியில்
வேங்கையுங் காந்தளு நாறி
ஆம்பல் மலரினுந் தான்றண் ணியளே.

(உரை). (சிலநாள்முந்தி வழக்கம்போல் இவளும் யானும் சேர்ந்து படுத்து உறங்கினேனாக) நான் சற்று அவளை விட்டகன்று பின் கிட்டி அணைத்தபோது, அத்துயிலிடை 'யான் வெயர்த்தேன்' என்றனள். (அப்பொழுது அதன் உட்கருத்தை இன்னதென்று உணராத நான்) அவள் அச்சத்தாற் கூறியது அது என்பதை இப்பொழுதுதான் அறிந்தேன். என்மகள், அந்தோ, கழலுந் தொடியை அணிந்த 'ஆய்' என்பானுடைய மேகங்கள் தவழும் பொதியில் மலையிடத்துள்ள வேங்கை மலர்களையும் காந்தள்மலர்களையும் மணம்பெறச் சூடினாளாயினும் ஆம்பல் மலரைக்காட்டினும் மிகவும் குளிர்ந்த மெய்யினளே.

முயங்க-தழுவ.யான்வெயர்த்தனென் என்றது, தலைமகள் இதுகாறும் ஒருகாலுந் தன்னைவிட்டுப் பிரியாது உடனுறங்குஞ் செவிலித்தாயை இனி விட்டுப்பிரிந்து காதலனுடன் கடுஞ்சுரத்தேகலுற்றதை நினைந்து பரிந்துரைத்தது. இனி-இப்போது. துனி - அச்சம், பயம். நாறி - நாறினும். தண்

ணியன் - குளிர்ந்தவன். 'ஆம்பலினுந் தண்ணியன்' என்றது அது எப்போதும் நீரிலே யிருத்தலால் மிகவும் குளிர்ந்திருக்குந் தன்மைபற்றி.

கழல்தொடி ஆய் மழைதவழ் பொதியில் - இவன் கடையெழுவள்ளல்களி லொருவன்; பொதியில் மலைக்குத் தலைவன்; 'ஆய் அண்டிரன்' என்றும் இவன் பெயர் வழங்கும். இவனைப் புறத்தில் முடமோசியார், "கழறொடி ஆஅய் மழைதவழ் பொதியில்" (128) என்று பாடிய அடியே இங்கு வந்துளதைக் கவனிக்க. அன்றியும் இங்குத் தலைவியைச் செவிலி வருணித்தது போலவே அகத்திலும்,

வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்துத்
தலைநா ளலரி நாறுமின்
அலர்முலை யாகத் தின்றுயில் மறந்தே (66)

என்று தலைவியைத் தோழி கூறியிருத்தல் ஒப்புநோக்கத் தக்கது.

---

வடம வண்ணக்கன் தாமோதரனார்] 85 [மருதம்

(1) பரத்தையிற் பிரிந்த தலைமகனுக்குத் தூதாய்வந்த பாணனுக்குத் தலைவி வாயில்மறுத்துக் கூறியது.

(2) தன்னை வாயில்வேண்டிவந்த பாணனுக்குத் தோழி வாயில்மறுத்துக் கூறியதுமாம்.

யாரினு மினியன் போன பின்னே
உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூன்முதிர் பேடைக் கீனி லிழைஇயர்
தேம்பொதிக் கொண்ட தீங்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாண ரூரன் பாணன் வாயே.

(உரை) ஊரினுள்ளே வாழ்கின்ற குருவியின் சேவல் தன் கருப்பமுதிர்ந்து தளர்நடையுற்ற பேடைக்குக் கருவை ஈனுவதற்கு ஓரிடத்தை அமைப்பதற்காகத் தேன்போன்ற சாற்றின் மிகுதியைக்கொண்ட இனிய கருப்பந்தண்டின் மணமற்ற வெள்ளிய பூவைக் கோதும் அழகிய ஊரனும், மற்றெவரினும் நமக்கினியவனுயு மிருந்த தலைமகன் நம்மை நீத்து அகன்றுபோன பின்பு, (அவனுக்குத் தூதாய் வந்த) பாணனது மெய்யான சொற்களே நமக்குக் கிடைப்பன ஆயின.

யாரினும் இனியன் - வரைவின்றி யாவர்க்கும் இனியனும் பரத்தமை பூண்டொழுகுபவன், என்றபடாம். குரீஇ - குருவி. 'துள்ளுநடைய' என்பதைப் பேடைக்கு விசேஷணமாக்குக. ஈனில்-ஈனும்இல், கருவுயிர்க்கும் இடம், அதாவது கூடு. இழைஇயர் - இழைப்பதற்கு. தேம்பொதி - தேன் பொதி. தேன் - கருப்பஞ்சாறு. கழை - கோல், தண்டு; கழைக்கரும்பு - கரும்புக்கழை என மாற்றுக. கொழுதல் - கிழித்தல், கோதுதல். யாணர்-அழகு. ஊரன் - மருதநிலத் தலைவன். வாய் - உண்மையான சொல்; இங்குக் குறிப்பு மொழியாய் 'பொய்யான சொல்' என்னும் பொருளில் வந்தது.

இப்பாட்டில் "உள்ளூர்க்குரீஇ...யாணரூரன்" என்ற வருணனையின் பொருளுஞ் சொல்லும்

[செய்வான்
சூன்முதிர் துள்ளுநடைப்பெடைக்கிற்றுணைச்சேவல்
தேன்முதிர்வேழத்தின்மென்பூக்குதர்செம்மலூரன்"

என்று திருக்கோவையாரில் (369) வந்திருத்தல் காண்க.

இறைச்சி:—அஃறிணை உயிர்களாகிய ஆண்குருவிகளும் தமது கருவுற்ற பேடைக்கு ஈனுமில் விழைத்து இனிது போற்றும் ஊரன் என்றமையால் வயாவுற்ற தன்காதலிக்கு இனியன புரிந்து தலையளி செய்யாது பரத்தையிற் பிரிந்துறைகின்ற அவனது அன்பிலா நிலையைக் குறிப்பால் இகழ்ந்து கூறியவாறும்.

---

வெண் கோற்றனார்] 86 [குறிஞ்சி

இடையீட்டினால் தலைமகனைக் கூடப்பெறாது தனிமையுற்று வருந்திய தலைமகள் தன்னை ஆற்றுவித்த தோழிக்குத் தனது ஆற்றாமை புலப்படக் கூறியது.

சிறைபனி யுடைந்த சேயரி மழைக்கட்
பொறையரு நோயொடு புலம்பலைக் கலங்கிப்
பிறருங் கேட்குந ருளர்கொல், உறைசிறந்
தூதை தூற்றுங் கூதிர் யாமத்
தானுளம் புலம்புதொ றுளம்பு
நாநவில் கொடுமணி நல்கூர் குரலே.

(உரை). துளிகளை மிகுதியாகக்கொண்ட காற்று வீசும் கூதிர்க்காலத்து இரவினுல்கரைகடந்த கண்ணீர்மழையைச் சொரியும் செவ்வரிகள்பரந்தகண்கள் பொறுக்கவொண்ணுத காமநோயால் வருந்தலால் மனங்கலங்கித் தன்புறம் போதெல்லாம் ஒலிக்கும் தனது விளைந்த நாவினுல் மணி செய்யும் வறுமையுற்ற குரலைக்கேட்க ஆவலுறுவார் (என்னை யன்றிப்) பிறரும் உளர் கொல்லோ?

'சிறைபனி யுடைந்த' என்பதைச் 'சிறை யுடைந்த பனி' என மாற்றுக. சிறையுடைந்த - கரையை உடைத்துக் கொண்டு பாயும். பனி - கண்ணீர். 'பனி மழைக்கண்' எனக் கூட்டுக. நோய் - விரகவேதனை. புலம்பலைக்கலங்கி - புலம்பலாற் கலங்கி (உருபுமயக்கம்). உறை - நீர்த்துளி. ஊதை - குளிர்காற்று. 'ஊதை சிறந்து உறையைத் தூற்றும் கூதிர்' என இயைக்க. கூதிர் - மழைக்காலத்துக் கடுத்த குளிர்காலம். யாமம் - இராக்காலம். யாமத்தான் - யாமத்தினுல். உளம்புதல் - உலம்புதல், ஒலித்தல். 'கொடு மணி, - கொடுமை - வளைவு. மணி - தேரிற்கட்டிய மணி. நல்கூர்தல் - நல்குரவு, தரித்திரம்; 'நல்கூர்வு' என்பது 'நல்குரவு' என்பதின் திரிபென்றுவது, 'நல்குரவு' என்பது கடைக்குறையாய் 'நல்' என நின்று, கூர்வு-கூர்தல் (மிகுதல்) என்னுஞ் சொல்லோடு கூடிய தொடர்மொழி என்றுவது கொள்ளலாம். உளம்பு நா (விலுல்) கொடுமணி நவில் நல்கூர் குரல்' என மாற்றுக. நல்கூர்குரல்-நல்கூர்ந்த குரல்-பல நாட்களாய்க் கேட்கப்படாத குரல்.

'உறைசிறந்த......யாமத்துச் சிறையுடை பனிக்கட்...... புலம்பலைக் கலங்கி உளம் புலம்புதொ றுளம்பு...நல்கூர்குரல் கேட்குநர் பிறரும் உளர்கொல்' எனக் கூட்டி உரைக்க.

'பிறருங் கேட்குநர் உளர்கொல்' என்றது தன்னையன்றி இவ்வாறு அருந்துயருறுவார் பிறரெவரும் இரரென்றுதலைவி தன்னிலையையெடுத்துத் தோழிக்குப் புலந்துகூறியதாம்.

ஒட்டக்கூத்தர் பாடிய
தக்கயாகப் பரணி
(உரையுடன்)
மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.
இதுவரையில் அச்சேறாத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.
விலாசம்:—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[413-வது பக்கத் தொடர்ச்சி]

முதல் பத்து—5-ம் பதிகம்

4-ம் பாசுரம்.

தானோ ருருவே தனிவித்தாய்த்
தன்னில் மூவர் முதலாய
வானோர் பலரும் முனிவரும்
மற்றும் மற்றும் முற்றுமாய்த்
தானோர் பெருநீர் தன்னுள்ளே
தோற்றி யதனுள் கண்வளரும்
வானோர் பெருமான் மாமாயன்
வைகுந்த னெம்பெரு மானே.

பதவுரை.

தானோ ஓர் தனி உருவித்தாய் என்று முதலடிக்கு அந்வயம் கொள்ளவேண்டும் உரு - அழகு. உருவித்தாய் - லோகங்களுக்கு அழகிய திருவித காரணமாய். தன்னில் மூவர் முதலாய - தன்னோடு மூவரான மூன்று மூர்த்திகள் முதலாக. வானோர்பலரும்- கணக்கிடக்கூடாத தேவதைகளும், முனிவரும் - ரிஷிகளும், மற்றும் - வேறான, அதாவது மனுஷ ஜாதி போன்றவர்களும், மற்றும்-திரியக்கான வஸ்துக்களும், முற்றுமாய் - இவைகள் இத்தனையுமாய், அதாவது அவற்றில் அநுப்பிரவேசித்து நடத்தும் கடவுளாய், தான் - ஸ்வயமாக, ஓர்பெருநீர் தன்னுள்ளே - ஸமுத்திரத்திலே, தோற்றி - உண்டாய், அதனுள் கண்வளரும்- அதனுள் யோகநித்திரையாய்த் தூங்குகிறவனாய், வானோர் பெருமான் - நித்தியசூரிகளுக்கு நாயகனாய், வைகுந்தன் - வைகுந்தத்தைத் தனக்குப் போகஸ்தானமாக வுடையவன், மாமாயன் - வெகு ஆச்சரியமான குணங்களை (இங்கு, ஸௌசீல்யம் பிரதானம்) உடையவன்; எம்பெருமானே-எனக்கு ஸ்வாமியாகிறவனே. உலகெல்லாம் படைத்துக் காப்பவனுக்கும் வைகுந்தமுடையவனுக்கும்உலகங்களைக் காப்பாற்றுவதன்பொருட்டு க்ஷீராப்தியில்கண்வளர்பவன்போலிருந்து யோகு செய்பவனுக்கும் சுலபத்துவமும் ஸௌசீல்யமும் (யாவரினும் மிகமிகத் தாழ்ந்தவ ராயினும் அவருடனும் ஒன்றுபோல நயந்து கலந்து பரிமாறுகை-) இருப்பது என்போலிகளுக்கு அருள்புரிவதற்காக வல்லவோ. அந்தக் குணங்கள் என்னைப்போல் அப்பனுக்கு உதவாவிடில் அவனுக்கு அக்குணங்கள் ஏதுக்கு? அப்படி என்னோடு கலந்தால்தான் அவனுக்கு அக்குணங்கள் இருப்பதாகச் சித்திக்கும். ஆகையால் நான் அவனுக்கு ஆத்மாந்தரம் ஸர்வசேஷவிருத்தியும் (அதாவது தாஸன் செய்யும் தொண்டு) நான் செய்வேன் அடிமை செய்யும்போது ஐயமில்லாமல் எம்பெருமானுக்கு நான் அடிமை என்று நினைத்துச் செய்வேன்.

---

5-ம் பாசுரம்.

மானேய் நோக்கி மடவாளை
மார்வில் கொண்டாய் மாதவா
கூனே சிதைய வுண்டைவில்
நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா
வானோர் சோதி மணிவண்ணா
மதுசூ தாநீ யருளாயுன்
தேனே மலருந் திருப்பாதம்
சேரு மாறு வினையேனே.

மானேய் நோக்கு-மான்போன்ற கண்களை உடைய, அதாவது கடாக்ஷத்தை ஆச்ரயித்திருப்பவர்களுக்கு உதவும், மடவாளை - குண பூர்ணமானவளை, அதாவது மஹாலக்ஷ்மியை, மார்பில் கொண்டாய் — நன்கு மதித்து உன் திருமார்பில் தரித்துக்கொண்டாய் மாதவா - இலக்குமிக்குப் புருஷனே, கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய்- கிருஷ்ணவதாரத்தில், கம்சனுக்குத் தினந்தோறும் பூக்கொண்டுபோகும் மூன்று கூன் வளைவுள்ள திருவக்கரையை, அவள் மற்ற அங்கங்களுக்கு நலிவு வாராதே மூன்று கூன்கள்மாத்திரம் நிமிர்ந்துபோகத் தழுவி மண்ணுண்டை எறியும் வில்லின் வளைவை நாணவிழ்த்து நிரூபித்ததேபோல் வெகு சுகமாய் நிமிர்த்தினாய்; கோவிந்தா - பசுக்களை இரக்ஷித்தவனே, வானோர் சோதி மணிவண்ணா - திருநாடெல்லாம் வியாபிக்கும்படி ஒளியை உடைய இந்திரநீல வர்ணமானவனே!

வினையேன் - முன்புபோல் இல்லாமல் உனக்குத் தொண்டுசெய்ய இப்போது இசைந்த எனக்கு அப்புருஷார்த்தம் வாய்க்காத பாபத்தை உடைய நான்; உன் தேனே மலரும் திருவடிப் போதுகளிலே சேருமாறு நீ கிருபை செய்யவேணும்.

குறிப்புக்கள்:—இம்மஹான், பகவானுடைய திவ்வியசரித்திரங்களில் தொனியர்த்தமில்லாத சேஷ்டைகளையோ இடங்களையோ எடுப்பதில்லை என்று நாம் முன் எழுதியுள்ளோம். இங்குத் திருவக்கரையின் கதையை எடுத்தது மஹாலக்ஷ்மியைத் தழுவுதற்கு உரித்தான திருமாலார் திருவக்கரையைத் தம் அங்கத்தினோடு அணைத்துக் கோணலைநிமிர்த்தினான். இது ஸௌசீல்யத்திற்கு அறிகுறி. லக்ஷ்மிக்குக் கணவனானவன் பசுமேய்த்துக் "கோவிந்தன்" என்று பட்டம் பெற்றான். இதுவும் ஸௌலப்பிய குறி. இந்தப் பாசுரத்திற்கு எல்லா உரைகாரர்களும் பின்வருமாறு சந்தர்ப்பம் கூறி அவதாரிகை உரைத்திருக்கிறார்கள். இங்கே ஆறாயிரப்படி அவதாரிகை எடுத்து எழுதற்பாலது. மற்ற உரைகளில் இவ்வளவு சுருக்கமாயும் விசிதமாயும் ஒரே இடத்திலும் பொருள் காணப்படாமைபற்றி இவ்வுரையின் அவதாரிகையையே இவ்விடத்தில் எடுத்தெழுதலாயிற்று. நாம். "இப்படி எம்பெருமானுடைய ஸௌசீல்யத்திலே ஆழ்வார் வசீகிருதராய் இருக்கச்செய்தே பின்னும் தானே சென்று இவர் கலவியை (ஸம்ச்லேஷத்தில்) கூடினுல் முன்புபோலத் தம் அநர்ஹதாநுஸந்தானத்தினுல் அகலுவரென்று இவர் தாமே நம்மோடு ஸம்ச்லேஷிக்க வேண்டுமென்று அபேக்ஷித்து நாம் அவசரப்பட வொண்ணாது, பதறினுல் சம்ச்லேஷமே நடவாது நின்றுவிடும், என்று பகவானே இவ

ரோடு கலத்தல்பொருட்டே தாம் எறவாங்கி இருக்க ஆழ்வாரும் அவனை அபேக்ஷிக்கிறார்." இப்படிப் பொருள் கொள்ளாமல்போனால் பகவான் நேரா இவர் கூட்டுக்காகவே தன் உலகவியாபாரங்களை நிறுத்திக்கொண்டு இவரை அணுகி இருக்க விரகதசையில் போல இவர் "சேருமாறு நீயருளாய்" என்று சொல்லச்சந்தர்ப்பமில்லை. இந்தத்தசகத்தில் ஆங்காங்கு இதுபோலுள்ள சந்தர்ப்பங்கள் உரைக்காரர் உதவிகொண்டே தெளியவேண்டும். எட்டு பத்து வருஷங்களுக்குமுன்னர் இக் குறிப்புக்களை விளக்கமாயறிய எத்தனித்தும் அவைகள் மனதிலூன்றி நிலைபெறாமல் இருந்தன. பிறகு பரியாலோசனை செய்ததின் நிமித்தமாய் அக்குறிப்புக்களின் பொருத்தமும் இன்றியமையாமையும் தெளிந்தேன். மதுசூதனன் என்று எடுத்தது ஆச்ரிதவிரோதி சுபாவத்தைக் கூறுவதின் நிமித்தம்

**6-ம் பாசுரம்.**

*வினையேன் வினைதீர் மருந்தானைப்*
*விண்ணோர் தலைவா கேசவா*
*மனைசே ராயர் குலமுதலே*
*மாமா யனே மாதவா*
*சினையேய் தழைய மாமரங்கள்*
*ஏழு மெய்தாய் சிரீதரா*
*இனையா யினைய பெயரினை*
*யென்று நைவ னடியேனே.*

வினையேன்வினைதீர்மருந்தானைப்-பாபியானநான்என் பாபத்தைத்தீர்க்க ஔஷதமாய்நின்றவனே; இச்சந்தர்ப்பத்தில்ஆழ்வார் குறித்துச் சொல்வது, அவர் சற்று முன்னே அநாஹதாநுசந்தானம் செய்து பகவான் இவர் சம்ஸ்லேஷத்திற்கு என்று எழுந்தருளியிருக்க அவரைவிட்டு அகன்றுபோதல் தன்பாபமென்று இப்போது நிரூபித்துத் தெரிந்துகொண்டபடி ஆழ்வாரின் இகழ்ச்சி அநுசந்தானம் ஒழியவே "மருந்தானைப்" என்று இறந்தகாலத்தால் கூறுகிறார். விண்ணோர்தலைவா - நித்தியசூரிகளுக்கு நிர்வாஹகன் கேசவா - கேசி என்றவர்களைக் கிருஷ்ணாவதாரத்தில் ஸம்ஹரித்தவனே. மனைசேர் ஆயர்குல முதல்வா - நீயே ஒருவர் அபேக்ஷிக்காமல் ஆயர்குலத்துப்பிறந்து அவர்கள் குலத்துக்குத் தலைவனாக நின்றாய்; மாமாயோனே-ஆச்சரிய திவ்வியசக்தி உள்ளவனே; சினையேய் மாமரங்கள் ஏழும் - கிளைகள் நிறைந்து தழைகளுடன் கூடியிருக்கும் ஏழு சாலவிருக்ஷங்களையும், ஓரே ஒருபாணத்தாலே எய்தவனே. இனையாய்-இப்படியெல்லாம் சரித்திரம் உள்ளவனே; இனைய பெயரினாய் - மேற் கேசவா ஸ்ரீதரா வென்று சொன்னது போலப் பல நாமங்களை உடையவனே; என்று - இப்படிக் கூப்பிட்டு; அடியேன் நைவன்-தாஸனான நான் உன்னடிமை செய்யப்பெறாமல் அலற்றி மனநோவுபடுவேன். ஸ்ரீதரன் - ஸ்நேக சுபாவத்தை லக்ஷிக்கிறது. இப்பாட்டுக்குப் பரமதாத்பரியம் "உன்தேனே மலரும் திருப்பாதம் சேருமாறு அருளாய்" என்று முன் பாசுரத்தில் சொன்னதே.

# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[429-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour)

புணர்ச்சி—இணை விழைச்சி:—உலகம் முழுதும் ஆணும் பெண்ணுமாகவே வழங்கிவரக் காண்கின்றோம். ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் நாடி நிற்கின்றனர். இதனைக் கண்ட "பைபில்", ஆண் மகனது அடி விலா எலும்பே பெண்ணாதலின், பெண்ணை ஆண் நாடுவது இயற்கையமைப்பென விளக்கியது. ஆண் பெண்ணையும் பெண் ஆணையும் நாடும் நாட்டத்தையே இங்குப் "புணர்ச்சி" என்ற இயற்கைச்செயனிலை என வழங்குகிறோம்; அதற்கேற்ற மெய்ப்பாட்டினை "இணை விழைச்சி" என அழைப்போம். காதல் என்பதனை அன்பினைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டுதலின், விலங்கு பறவை முதலியவைகளிடத்தும் இயற்கையளவாய்க் காணப்படும் இம்மெய்ப்பாட்டிற்கு வேறொரு பெயர் தந்து இணை விழைச்சி என்ற சொல்லைப் பயன்படுத்திக்கொள்வது நலம். இச்செயனிலை பதினைந்து இருபதாண்டு சென்றபின்தான் முற்றி மலர்ந்து ஒளிர்கின்றது. ஆதலினால் பழக்கவழக்கத்தாற் படிந்த செயல்களையும் இயற்கைச்செயல்களையும் இச்செயனிலையில் வேறு பிரித்தறிவது அருமையாகின்றது. எனினும் புணர்ச்சியை இயற்கைச்செயனிலை என்று சொல்லத் தடையில்லை. குழிமுயல் அல்லது வெள்ளெலி என்ற இனத்தைச்சார்ந்த ஆணொன்றையும் பெண்ணொன்றையும் தனித்தனியாக வேறொன்றின் காற்றும் படாமல் சிறுபொழுதுதொடங்கி வளர்த்து வருகின்றோம். தக்க காலம் வந்ததும் இவற்றை ஒருங்கே இருக்கவிட்டால் ஒன்றையொன்று நாடிக் கூடி விளையாடுவதைக் காண்கிறோம். புணர்ச்சி என்ற இயற்கைச்செயனிலையின் செயலனைத்தையும் காண்கின்றோம். பெண்வடிவைக் கண்டதும் ஒன்றுமறியாத ஆண்மகன் ஒரு கிளர்ச்சியுற்று ஒன்றுமறியாது பின்தொடர்கின்றான் ஒவ்வோரியற்கைச்செயனிலையிலும் ஒவ்வொரு விடாய் உண்டென்றும், அவ்விடாய் எழுந்தபோது, உயிருளி தன் செயலின் முடிவு இன்னதுதான் என உணராது சிலபொழுது, அலைக்கழிப்புறுகிறதென்றும், இவ்வாறு காம்புக் கிளர்ச்சி பலவழியிலும் பாயும்போது தட்டுத்தடுமாறித் தன் செயனிலையின் முடிவு இன்னதென உணர்கின்றதென்றும் கண்டோம். இதற்கேற்ப, ஒன்றுமறியாத ஆண்மகனும் இணைவிழைச்சி விடாயால் (காம விடாய்) உந்தப்பட்டுப் பெண்பின் சென்று பின்னுண்மையை உணர்கின்றான். புணர்ச்சி என்ற முடிவுநிலை எதிரொன்றனுக்கு முன்னேற்பாடாக வழிசெய்தமைத்துப் பண்ணுறுத்தும் எதிரொன்றல்களாக இவன் செயல்கள் அமைகின்றன. இவ்



வாறு நம்மையும் அறியாமல் இவ்விடாயும் இவ்வுள்துடிப்பும் நம்மை இயக்கிவைப்பதால் புணர்ச்சியை இயற்கைச்செயல் என்பதற் கென்னதடையுண்டு?

நம் முடம்பிலுள்ள பல கழலைகளும் (Glands) இச்செயனிலையை வலியுறுத்துகின்றன. நெஞ்சப் பெருங்கழலை (Thyroid) இச்செயனிலை இயங்கும் போது பெருக்கின்றதாம். தலையில் உள்ள இரண்டு கழலைகளை அடித்தலைக்கழலை என்றும் மேற்றலைக் கழலை என்றும் கூறுவோம். அடித்தலைக் கழலையை முன்னர் மூக்கடிக்கழலை எனக் கூறினோம். அடித்தலைக் கழலை இரண்டு கழலைகளாக உள்ளமை கண்டோம்; அடித்தலை முன்கழலை (Pre Pituitary) என்றும், அடித்தலைப் பின்கழலை (Post Pituitary) என்றும் அவற்றைக் கூறலாம். இவற்றில் அடித்தலை முன்கழலையே புணர்ச்சிநிலையையும் பாற் குறிகளையும் இயக்குகின்றன. குண்டிக்காய்க்கழலை Adrenal) அகணியும் (medulla) புறணியுமாக (Cortex) விளங்குவதைக் கண்டோம். குண்டிக்காய்க் கழலைப் புறணி (Adrenal Cortex) உடல்நிலைப் பாலறிகுறிகளை அடக்கியாள்கின்றது. ஆண்குறி பெண்குறி என்று சொல்லப்படுபவையே முதனிலைப் பாலறிகுறிகளாம். இவையில்லாதபோது ஆண் பெண் என்ற வழக்கிற்கே இடமில்லை. மீசை பாற்கழலை முதலியன இல்லாதபோதும் ஆண் பெண் என்ற வழக்கிற் கிடம் உண்மையால் இவற்றை முதனிலைப் பாலறிகுறிகள் (Primary Sexual Characteristics) எனச் சொல்வதற்கில்லை. ஆனால், அவை ஆணோடும் பெண்மையோடும் முறையே ஒருங்கு காணப்படுதலின் அவையும் பாலறிகுறிகளாக அமைந்துள்ளன. ஆதலின் இவற்றை உடனிலைப் பாலறிகுறிகள் (Secondary Sexual Characteristics) என வழங்குவோம். இவற்றைத்தான் குண்டிக்கழலைப் புறணி அடக்கியாள்கின்றது. இப் புறணிச்சாறு கருப்பையிலேயே மிகுதியாகப் பாயுமானால் ஆண்மையும் பெண்மையும் ஒன்றாக இயைந்த அலிப் பிறப்பு உண்டாகின்றது. பிறந்தபின் இவ் வியற்கைச்செயனிலை முற்றுவதற்குமுன் இப்புறணிச்சாறு மிகுதியாகப் பாய்ந்தால், விரைவில் உடனிலைப் பாலறிகுறிகள் வெளித்தோன்றி வளர்கின்றன. இரண்டு மூன்று ஆண்டிலேயே பாற்கழலையோ மீசையோ தோன்றுமானால், இப் புறணிச்சாறு மிகுதியாகப் பாய்கின்றதென்க. பாலறி கழலைகளாய்ச் சிறந்தனவும் உள்ளன. ஆண்களிடை விரைப்பையாகவும் பெண்களிடையே சினைப்பையாகவும் பாலறிகழலை விளங்குகின்றது. இக்கழலை இல்லையானால், ஆண் என்ற பேச்சுக்கும் பெண் என்ற பேச்சுக்கும் சிறிதும் இடமில்லை. இக்கழலையினூறும் பலவகைச் சாறுகளே புணர்ச்சியின் பல நிலைகளையும் வேறுபடுத்தி யியக்கி வைப்பன. இக் கழலைச்சாறு பெருக்கெடுத்தால் தான் புணர்ச்சிநாட்டம் விலங்குகளிடைப் பொலிவாக (Heat) விளங்குகின்றது இவ்வாறு பலதிறப்பட்ட கழலைகள் எல்லாம் முற்றிச் செயலுற்று உடலை ஆட்டிப் படைப்பதற்கு முன், உடலும்பெற்று வளர்தல் வேண்டும். ஆதலின் மார்புக்கழலை யொன்றை (Thymus) இயற்கையன்னை படைத்துள்ளாள். மற்றைய கழலைகள் முற்றுதபடி அடக்கியாள்கின்றது இக்கழலை. அதனால் குழந்தையின் உடல் வளர்கின்றது. குழந்தைநிலை நீங்கியதும் இக்கழலை சுருங்கிப் போகின்றது. அப்போது மற்றைய கழலைகள் செயலுறுகின்றன. குழந்தைநிலை மாறியபோதிலும் புணர்ச்சி என்னும் இயற்கைச்செயனிலை முற்றுவதில்லை. ஏன்? இச்செயனிலை இயங்குவதற்கேற்ற அளவு உடலும் மனமும் அதற்குள் முற்றி நிற்க முடியாதன்றோ? உலகஅறிவு மேலும் வளர்தல்வேண்டும். அதுவரை இவ் வியற்கைச்செயனிலையை அடக்கி வைத்திருப்பது மேற்றலைக்கழலை (Pineal Gland) யேயாம். உடனிலைப் பாலறிகுறிகளை வளர்ப்பது குண்டிக்கழலைப் புறணியே எனக் கண்டோம். அப்புறணி இயங்காதவாறு இம் மேற்றலைக்கழலை தடுக்கின்றது. அதனால் இளமை நீங்கும்வரை உடனிலைப் பாலறிகுறிகள் தோன்றுவதில்லை ஏழெட்டு ஆண்டுகளுக்குப் பின் இம் மேற்றலைக்கழலை சுருங்கத் தொடங்குகின்றது. அப்போது புணர்ச்சி என்ற இயற்கைச் செயனிலையும் வளர்ந்து முற்றத் தொடங்கும்.

விரை என்பது மணம் நாற்றம் என்ற பொருளைக் குறிப்பது. மலரிடையே காணப்படும் விரைப்பொடி (மகரந்தம் Pollon dust) அன்றோ மரத்தில் ஆணியல்பாக அமைந்துள்ளது. ஆதலின் விரைப்பொடியைக் குறிக்க விரை என்ற சொல்லே சிறந்ததாம். இது பிற்காலத்தில் கருவாய் முற்றிய கொட்டையைக் குறிப்பதாயிற்று.

ஆனால், மக்களிடையோ, தன் முற்காலத்திய பொருளையே குறிக்க இச்சொல் வழங்கிவருகின்றது. ஆணியல்பாய் அமைந்த விரைப்புழுக்கள் (Spermatazoa) நிறைந்த விரைச்சாறு (Sperm) பாயும் விரைப்பை (Testes) என்ற கழலையைக் குறிக்கவே இச்சொல்லை உலகினர் பயன்படுத்திக் கொள்கின்றனர். இத்தகைய அழகியதோர் சொல்லை இடக்கர்ச்சொல்லென இகழ்வார் இகழ்ந்து இடருறுக. இடக்கர்ச்சொல் லென்பது ஏழைமாக்களின் இழிந்த மனத்தில் புகுந்தெழுஞ் சொல்லே என்க. தமிழ் மணங்கமழும் தனிச்சொல்லாம் இதனை நாம் இங்குப் பயன்படுத்திக்கொள்வோம். விரை என்பது ஆணினது இயல்பைக் குறிப்பதுபோலப் பெண்ணியல்பைக் குறிப்பது சினையாகும். பெண்களுக்குச் சினைப்பை (ovary) ஒன்றுண்டு. அதிலிருந்து நன்மையையடைந்த (Puberty) பிறகு ஒவ்வொரு திங்களும் ஒவ்வொரு சினை வெளிவருகின்றது. அச்சினை விரையொடு சேர்ந்தால் கருவாகின்றது. மரஞ்செடி இவற்றினிடையேயும் இவ்விரையும் சினையும் உள்ளன இவை கூடினால்தான் காயும் பழமும் கொட்டையும் வளர்கின்றன. இவ்விரண்டின் சேர்க்கையே பயிர்படுதல் என்று சொல்லப்படும். செடி கொடிகளிடையே விரையும் சினையும் காற்றினாலோ தேனீக்கள் முதலியவற்றாலோ ஒன்றுபடுத்தப்படுகின்றன. விரைமேல் உட்காரும் தேனீயின் காலில் விரைப்பொடி ஒட்டிக் கொள்கின்றது. அதுவே சினையின்மேல் சென்று குந்துமானால், காலில் ஒட்டிய விரையும் அச்சினையும் ஒன்றுபடுகின்றன; கருவாய் முற்றுகின்றன. அல்லாக்கால், அடிக்கின்ற காற்றின் வழியாக விரைப்பொடி பறந்துசென்று சினைமேற் படிந்து கருவாக முற்றுகின்றது. இதுவே மரங்களிடைப் புணர்ச்சியாம். இனம் வளர்தலே புணர்ச்சியின் நோக்கமாகலின்

விரையும் சினையும் ஒன்று சேர்தலே இவ் வியற்கைச் செயனிலையின் முடிவென்க. இனி மீன்களிடையே, ஆண்மீனனது பெண்மீனருகே வந்ததும் விரையை வெளியிடுகிறது; பெண்மீனும் சினையை வெளியிடுகிறது. அவ்விரையும் சினையும் பின் நீரிடை ஒன்று சேர்ந்து கருவாக முற்றுகின்றன. அருகு வருவதே அவற்றின் புணர்ச்சியாக அமைகின்றது. ஆனால் பறவைகளிடையும் பாலிகளிடையும் சினைப்பை உடலினுள்ளே அமைந்து கிடத்தலின் விரையும் சினையும் ஒன்றுகூட வேண்டுமானல், ஆணும் பெண்ணும் அருகுவருவதோடு ஒருவர் ஒருவரைக் கட்டித் தழுவல் வேண்டும். அணைக்கும்பொழுது ஊற்றின்பம் பிறக்குமாறு இயற்கை யமைந்தமையால் பறவையும் பாலியும் அணைந்து இன்புறுகின்றன. ஊற்றின்பம் நாடியவர்கள் தம்மையு மறியாது அவ்வகையில் இயற்கையின் அடிமையாகி இனத்தை வளர்க்கின்றனர். இவ்வூற்றின்பமே ஆணையும் பெண்ணையும் ஒன்று பிணித்துக் குடும்பத்தை வளர்க்கின்றது. இவ்வூற்றின்பம் சிறந்து விளங்கத்தக்க முறையில் உடலுறுப்புக்களும் உயர்நிலையடைந்த உயிருளிகளிடையே உயர்நிலையடைந்து விளங்குகின்றன. தாய்மையும் பிறக்கின்றது. குழவியைக் கண்டு அன்பு பாராட்டுவது போல, அடங்கிக்கிடக்கும் பெண்ணைக் கண்டபோதும் தாய்மை எழுந்து விளங்குகிறது.

இவ் வியற்கைச்செயனிலை இல்லையானல் இனம் வளருவதில்லை. இதன் இன்றியமையாமையை இதற்குமேலும் என்னென்று புகழ்வது? இதனையறியாது இகழ்வார் எல்லாம் குன்றுமுட்டிய குருவி போலக் குடர்குழம்ப வேண்டுவதுதான். ஆனல், இஃது ஒரு பெருந் தீ. நமக்கு உணவையும் தந்து உடலையும் காப்பது தீயேயானலும், அதனை அடக்கியாளாது வளரவிட்டால், நம்மையும் சாம்பலாக்கிப் பொசுக்கி விடுமன்றோ? அங்ஙனமே இவ்வியற்கைச் செயனிலையையும் அடக்கி யாளாமற்போனல் இது நம்மையும் நம்மினத்தையும் எரித்துவிடும். நன்றாக ஓடக்கூடிய குதிரையானலும், அதனை அடக்கியாளாமற்போனல், பள்ளத்திலன்றோ கொண்டு தள்ளும்.

ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் எவ்வாறு அறிகின்றனர் என முன்னரே ஆராய்ந்தோம். பாலறிகுறிகளைக் கண்டே இவ்வியற்கை யுணர்வாகிய பாலுணர்வு (Perception of sex) பிறக்கின்றதெனக் கண்டோம். இனம் வளரவேண்டுமானல், உடலுரம்பெற்ற இருவர் ஒன்று கூடுதல்வேண்டும். உரம்பெற்ற உடலமைப்பே கண்கவர் வனப்பாகும். ஆதலினல், உரம்பெற்ற உடலமைப்பையே பெண்கள் விரும்புகின்ற இயற்கைஇயல்பினலேயே இனம் காக்கப்படுகின்றது. இவ் வியற்கைஇயல்பினைப் பாற்றேர்தல் (Sexual Selection) என்பர். இஃதும் ஓர் இயற்கைத் தேர்தலேயாம். (Natural Selection) உடலுரம் பெற்றவர்களே தந்தைகளாக விளங்கத் தேர்ந்தெடுக்கப் படுவதால், அவர் வழிவரும் மரபினரும் உடலுரம்பெற்று விளங்கி முன்னடைகின்றனர். பெண்ணே இத்தேர்தலை நடத்துகின்றாள்; தேர்ந்தவர்க்குத் தன்னையே தனிப்பெரும் பரிசிலாகத் தந்து உதவுகின்றாள். ஆகவே இத்தேர்தலில் பெண்ணே வாளா கண்டு நிற்கின்றாள். ஆண்களே தம் திறத்தையெல்லாம் காட்டி எதிர் நிற்கின்றனர். இவ்வாறு எதிர்காட்டி நிற்றலை இணைபயிறல் (Courting) எனலாம். எதிர்பாலார் மெச்சிப் பாராட்டுமாறு தம்முடலுரத்தைக் காட்டுகின்றனர். மயில் ஆடுகின்றது. ஆட்டப்புறு கூத்தாடுகின்றது. வானம்பாடி பலநாள்வரை பாடி மயக்குகின்றது. ஆண்மகன் மார்பை யகலப்படுத்தித் திரண்டுருண்ட தோள்களைக்காட்டி மீசையை முறுக்கி நேர் நிமிர்ந்து நிற்கின்றான். தன்னழகு போதாதென்று அணியும் உடையும் புனைந்து செருக்கி நிற்கின்றான். கலவியே, புணர்ச்சியென்னும் இவ் வியற்கைச்செயனிலையின் முடிபானலும், அது நிகழ்வதற்கு முன்னகப் பல நாள்வரை இவ்வாறு ஒருவரைஒருவர் விரும்பிப் பாராட் டெடுத்தலைக் காண்கிறோம். மெய்தொட்டுப் பயிறல் என்ற தொடரை மனதில் அமைத்துக் கொண்டு இதனை இணைபயிறல் (Courting) என வழங்குவோம். இயற்கைச்செயனிலையின் முடிவிற்கேற்றவாறு முன்னேற்பாடாக இவ் வினைபயில் நிலையில் உடல் மாறியமைவதால் இணைபயிலலானது பண்ணுறுத்தும் எதிருன்றலாகும் (Preparatory Response)

பெண்கள் கண்டுகளிக்க ஆண்கள், ஆடிப் பாடும்படி இயற்கையில் ஓர் இயைபு உள்ளமையால் காதற் செயலை முன் தொடங்குவோர் ஆண்களேயாம் வண்டோச்சி மருங்கணைந்து மெய்தொட்டுப் பயின்ற பின்னரன்றோ பெண்ணனவள் நகைமுகங் காட்டி, நாணிக் கண் புதைக்கின்றாள். ஆதலின் இணைவிழைச்சிவிடாய் பெண்களிடம் அடங்கிக்கிடக்கின்றது. ஆண்களிடைப் பொங்கிவழிகின்றது. பெண்களின் அடக்கமும் ஆண்களின் முனைப்பும் இதனல் புகழப்படுகின்றன. இவ்வமைதியே பின்னர் நாணமாகச் சிறக்கின்றது.


ஸ்ரீ. சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய தமிழ் வேதங்கள்

ஸ்ரீ ஆத்ம புராணம் ரூ. 8, ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை வசனம் ரூ. 5, நியாயப் பிரகாசம் வசனம் ரூ. 4, வேதாந்த மகா சிந்தாமணி ரூ. 4, தத்துவாநுஸந்தானம் ரூ. 2-8, நியாய முக்தாவளி அணா. 12, தோத்திரயம் (பகவத்கீதை, ஈசுவரகீதை, பிரமகீதை வியாக்கியானத்துடன்) ரூ. 2, வருத்தி பிரபாகரம் ரூ. 4

ஆரணி. குப்புசாமி முதலியார் இயற்றிய துப்பறியும் புதிய நாவல்கள். நிகரற்றவை!

இரத்தினபாய் அல்லது இந்திரஜாலக் கள்ளன் ரூ. 2-8, கடற்கொள்ளைக்காரர்கள் (2-பாகம்) ரூ. 3-4-0 இராஜமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ரூ. 2, கிருஷ்ணவேணி ரூ. 2, சந்திராபாய் அல்லது சங்கேதாலன் வெற்றி ரூ. 2, இரத்தின புரியின் இரகசியம் (மூன்று பாகமும்) ரூ. 6, கைவல்லிய நவநீத வசனம் ரூ. 1-8, ஆனந்த சிங். ரூ. 2.

இதர புஸ்தகங்கள்.

[illegible] அல்லது ஓர் துணிகரமான சாமார்த்திய ரயில்வேக்களவு (2 பாகம்) ரூ. 2, விக்ரமாதித்தியன் கதை ரூ. 2, வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம். (750 பக்கங்கள்) ரூ. 3, கைத்தொழில் முறைகள் ரூ. 1-8, வர்த்தகக் கணித நூல் அல்லது, தமிழ்புக்கீப்பிங் ரூ. 2, பாரிசக்கதைகள் ரூ. 3, வேதாந்த [illegible]. ரூ. 8.

V. S. T. Swamy & Co., Book Binding and Novel Depot,
VEPERY, P. O., MADRAS.




# தமிழ்ப் பாடம் 125.

## வில்லி பாரதம்—உத்தியோக பருவம்

[ 435-வது பக்கத் தொடர்ச்சி. ]

கிருஷ்ணன் தூதுச் சருக்கம்.

என்று கூறவிற லங்கர் பூபதியும்
யானிருக் கவிகல் விசயனைச்
சென்று சீறியுயிர் கொள்ளவல் லவர்கள்
யாவ ரென்றுநனி செப்புவீர்
கன்றி னால்விள வெறிந்த கள்வனி
வனின்று தேர்நனி கடாவினு
மன்று போரினிடைக் காண லாகுமென
தாடல்வெஞ் சிலையி னாண்மையே 66

துரியோதனனைத் தொடர்ந்து கர்ணன் தனது பராக்கிரமத்தைப் பற்றிப் பேசுகின்றான்.

பதவுரை.

என்றுகூற - மேலே சொல்லியபடி துரியோதனன் கூறவும் (அவனைத் தொடர்ந்து), விறல் - பராக்கிரமசாலியான, அங்கர் பூபதியும்-அங்கதேசத்துத் தலைவனை கர்ணனும், (எழுந்து) யான் இருக்க - நான் இருக்கையில், சீறி - சீற்றத்தோடு, சென்று - போர் செய்யச் சென்று, இகல் விசயனை - பகையுடைய அர்ச்சுனனது, உயிர் - உயிரை, கொள்ள - கவர, வல்லவர்கள் - வல்லமை யுடையவர்கள், யாவர் - யார் இருக்கின்றார்கள், என்று - என்று, நனி செப்புவீர் - நன்கு கூறினீர்கள்.

கன்றினால் - கன்றுக்குட்டியைக் கொண்டு, விளவு எறிந்த - விளாம்பழம் அடித்த, கள்வன் - திருடனாகிய கண்ணன், நின்று - அர்ச்சுனன் பக்கத்தில் இருந்து, தேர் - தேரை, நனி கடாவினும் - நன்றாகச் செலுத்தினாலும், போரின் இடை - போர் செய்கையில், எனது - என்னுடைய, ஆடல் வெஞ்சிலை - ஆற்றலுடைய கொடிய வில்லுடைய, ஆண்மையை - சிறப்பை, அன்று - அப்பொழுது, காணலாம் - காண்பீர்கள்.

விரிவுரை:—கண்ணனைக் கொல்லும்படி கம்ஸன் ஏவிய அசுரன் ஒருவன், பசுங்கன்றின் உருவம் எடுத்து மந்தையோடு கலந்து சமயம்பார்த்திருந்ததை அறிந்த கண்ணன் மாலையில் திரும்பும்போது தன்னுடன் வந்த ஆயர் சிறுவர்களது விருப்பிற்கிணங்கி வழியில்நின்ற விளாமரத்தினின்று காய்களை உதிர்க்க, அம் மாயக்கன்றினையே குணில்ஆகப் பற்றி மோதி அவ்வசுரனை மாய்த்த கதை இங்குக் குறிக்கப்பட்டிருக்கின்றது. 'கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்' என்ற சிலப்பதிகார அடியை மனத்திற் கொண்டு 'கன்றினல் விளவெறிந்த கள்வன்' எனவில்லிவரைந்தனர் போலும்.

குறிப்பு:—அங்கர் + பூபதி = அங்கர்பூபதி(அங்கர்களுடைய பூமிக்குப் பதி) ஆறும் வேற்றுமைத் தொகையாயினும்நிலைமொழி உயர்திணையாதலால் வருமொழி முதல் வல்லினமெய் மிகவில்லை. (வால்யூம் 8, பக்கம் 370).

பூ + பதி = பூபதி. (பூமிக்குப் பதி) நான்காம் வேற்றுமைத் தொகையாயினும் நிலைமொழி சமிஸ்கிருதச் சொல் ஆகையால் வருமொழி முதல் வல்லினமெய் மிகவில்லை. (வால்யூம் 8, பக்கம் 336)

விசயனை + சென்று = விசயனைச் சென்று. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினமெய் மிகுந்தது.

சென்று + சீறி = சென்று சீறி. மென்றொடர்க்குற்றியலுகரத்தை ஈற்றிலுடைய வினையெச்சத்தொடரில் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

உயிர் + கொள்ள = உயிர் கொள்ள. இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

எறிந்த + கள்வன் = எறிந்த கள்வன். பெயரெச்சத் தொடராதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை.

---

அம்ப ரத்தவ ருடன்று சீறினுமோ
ரம்பிலே யழிவர் திண் ணம்யான்
வெம்ப ணிப்பக ழியேவி லாவியுடன்
மீளுவா னமரில் விசயனே
யிம்ப ரிற்புகல விருத ளத்தினு
மெனக்குநே ரொருவ ரில்லையென்
றும்பர் கற்பகமு நாண வண்மையி
லுயர்ந்த வீரனிவை யுரை செய்தான். 67

தேவர்களுமே தனக்கு நிகரில்லாதவர் எனில் பூலோகத்தார் எம்மாத்திரம் என்று பின்னும் கர்ணன் பேசுகின்றான்.

பதவுரை.

அம்பரத்தவர் - தேவலோகத்தவர், உடன்று - மாறுபட்டு, சீறினும் - கோபங்கொண் டெழுந்தாலும், ஓர் அம்பிலே - எனது ஒரு அம்பினல், அழிவர் - அழிந்துபோவர், திண்ணம் - இது நிச்சயம்.

வெம் - கொடிய, பணிப்பகழி - நாகாஸ்திரத்தை, யான் - நான், ஏவில் - ஏவினல், அமரில் - போரிலிருந்து, ஆவியுடன்-உயிருடன், மீளுவான் - மீளுபவன், விசயனே - அர்ச்சுனனே.

இம்பரில் - இப்பூலோகத்தில், இரு தளத்தினும் - பாண்டவர் பக்கத்திலாகட்டும் கௌரவர் பக்கத்திலாகட்டும், எனக்கு நிகர் - எனக்குச் சமானமானவர் என்று, புகல - சொல்வதற்குக் கூட, ஒருவர் - எவரும், இல்லை - இல்லை,என்று - என்று, உம்பர்-தேவர்களுடைய, கற்பகமும் - கற்பகவிருக்ஷமும், நாண - நாணமுறும்படி, வண்மையில் - கொடையில்,உயர்ந்த வீரன் - சிறந்த வீரனாகிய கர்ணன், இவை - இவைகளை, உரைசெய்தான் - சொன்னான்.

---

திசைய னைத்தினும் வளைந்த தானவரை
யிரவி வந்ததொரு திசையின்வாய்
நிசியெ னப்பொருது வான வர்க்கர
சளித்து வந்தவிற வீர்மையான்
விசய னுக்குநிகர் நீகொலோ கடவுள்
வெண்ம திக்குநிகர் வெள்ளியோ
வசையில் விற்றொழி லும் வல்லை யோவென
வொரசைவி லாதவ னறைந்தனன். 68

ஆற்றல் அதிகமுடையவனயினும் கர்ணன் அர்ச்சுனனுக்கு நிகராகமாட்டானென்று பீஷ்மன் எதிருரைக்கின்றான்.

பதவுரை.

திசை அனைத்தினும் - எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து, வளைந்த - சூழ்ந்துகொண்ட, தானவரை - (நிவாதகவச காலகேயர் என்னும்) அசுரர்களை, இரவி - சூரியன், வந்தொரு - வந்த, திசையின்வாய் - திசையில், நிசியென - இருளைப்போல், பொருது - சண்டைசெய்தழித்து, வானவர்க்கு - தேவர்களுக்கு, அரசு - அவர்களது பொன்னுலகத்தை, அளித்து - மீட்டுக் கொடுத்து, வந்த - திரும்பின, விறல் நீர்மையான் - ஆற்றல் பொருந்திய, விசயனுக்கு - அர்ச்சுனனுக்கு, நிகர் - சமானம், நீகொலோ - நீ ஆவாயோ.

கடவுள் - தெய்வத்தன்மை பொருந்திய, வெண் - வெண்மையான, மதிக்கு - சந்திரனுக்கு, நிகர் - சமானமாவது, வெள்ளியோ - சுக்கிரனோ!

வசையில் - பழுது இல்லாத, வில் தொழிலும் - வில்வித்தையும், வல்லையோ - நீ வல்லவனோ,

என - என்று, ஒருஅசைவு - ஒருவிதமான பக்ஷபாதமும், இல்லாதவன் - இல்லாதவனாகிய, பீஷ்மன், அறைந்தனன் - சொன்னான்.

விரிவுரை:—அந்தணனென்று கர்ணன் பொய் கூறித் தன்னிடம் கற்ற விற்றொழில் சமயத்தில் பயன்படா தொழியக்கடவதென்று பரசுராமன் இட்ட சாபம் இங்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.

## இலக்கணம்.

L. இடைச்சொற் றொடர்.

இடைச்சொல்லை நிலைமொழியாகப் பெற்று வருகின்ற தொடர் இடைச்சொற்றொடராகும். தனக்கே தனியான பொருள் ஒன்றும் இன்றி வேறொரு பெயர்ச்சொல்லையேனும் வினைச்சொல்லையேனும் சார்ந்துநிற்கின்ற இடங்களில் மாத்திரம் பொருள் படக்கூடிய சொற்கள் இடைச்சொற்கள் எனப்படும் (வால்யூம் 1. பக்கம், 369, 392, 449, 489, 668).

பொருள்படும் வகையினால் இடைச்சொற்கள் பல இனத்தன. அவ்வினங்களின் சிலவற்றைத் தனித் தனிகொண்டு, அவைகளுக்குப் பின்வரும் மொழி முதல் வல்லினமெய் புணருமாறு எவ்வாறெனக் காண்போம்:—

(a) அ இ உ, என்னும் சுட்டு இடைச்சொற்களுக்குப் பின்னும், எ என்னும் வினா இடைச்சொல்லுக்குப் பின்னும் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

அ + குதிரை = அக்குதிரை
இ + காலம் = இக்காலம்.
உ + சிங்கம் = உச்சிங்கம்
எ + தேசம் = எத்தேசம்.

(1) இச் சுட்டு வினாக்களினடியாகப் பிறந்த அந்த இந்த எந்த என்னும் சொற்களுக்குப் பின்னும் வல்லினமெய் எப்பொழுதும் மிகுந்தே வரும்.

அந்த + பையன் = அந்தப்பையன்.
இந்த + காடு = இந்தக்காடு
எந்த + சகடம் = எந்தச்சகடம்.

(2) அங்கு, இங்கு, உங்கு, ஙங்கு, எங்கு ஆண்டு ஈண்டு யாங்கு யாண்டு என்பனபோல், சுட்டுவினாப் பொருளொடு கலந்து ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணர்த்துகின்ற இடைச்சொற்களுக்குப் பின் வல்லினமெய் மிகுந்தே வரும்.

அங்கு + கண்டேன் = அங்குக்கண்டேன்
யாண்டு + சென்றாய் = யாண்டுச்சென்றாய்
எங்கு + திருடினாய் = எங்குத்திருடினாய்.

(3) அன்று, அன்று, இன்று, என்று, பண்டுமுந்து என்பனபோல் ஏழாம்வேற்றுமைக் காலப்பொருளை உணர்த்துகின்ற இடைச்சொற்களுக்குப்பின் வல்லினமெய் மிகாது.

அன்று + சென்றேன் = அன்று சென்றேன்.
இன்று + தந்தேன் = இன்று தந்தேன்.
என்று + காண்பேன் = என்று காண்பேன்.

(4) யா என்னும் வினாஇடைச்சொல்லிற்குப் பின் வரும் வல்லினமெய் மிகாது.

யா + சிறிய = யாசிறிய
யா + பெரிய = யாபெரிய.

குறிப்பு:—அது, இது, எது, யாது என்று நிற்கும், சுட்டு வினாச் சொற்களுக்குப்பின்னும் வல்லினமெய் மிகாது.

அது + பெரிது = அதுபெரிது.
எது + சிறிது = எதுசிறிது.
யாது + கூறினாய் = யாதுகூறினாய்.

(b) போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, என்பனபோன்ற உவம உருபுகளுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்

கிளிபோல + பேசினாள் = கிளிபோலப் பேசினாள்.
புயல்புரைய + பொழிந்தான் = புயல்புரையப்பொழி
[ந்தான் ,முதலியன.

குறிப்பு:—அன்ன, என்னும் உவமஉருபு இடைச்சொல்லிற்குப்பின் வல்லினமெய் மிகாது.

கார்அன்ன + கூந்தல் = கார்அன்ன கூந்தல்.
தீயன்ன + சொல் = தீயன்னசொல்.

(c) முன்னிலை அசைகளாக வரும், மியா, மதி, வாழிய என்பனபோன்ற இடைச்சொற்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது.

கேண்மியா + கொற்றவ = கேண்மியா கொற்றவ
அருண்மதி + புலவ = அருண்மதிபுலவ
(காணிய வா)வாழிய சாரல் = வாழியசாரல்

(d) இனி, என, மற்று, ஆங்க, என்னும் இடைச்சொற்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

இனி + காணேன் = இனிக்காணேன்
என + சொன்னான் + எனச்சொன்னான்.
மற்று + தீமை = மற்றுத்தீமை.
ஆங்க + குயில் = ஆங்கக்குயில்.

(e) வாளா, சும்மா, என்னும் பயனின்மைப்பொருளைத் தரும் இடைச்சொற்களுக்குப்பின் வரும் வல்லினமெய் மிகாது.

வாளா + சென்றான் = வாளா சென்றான்.
சும்மா + போ = சும்மா போ.

(f) மன்ற,என்னும் நிச்சயப்பொருள்தரும்இடைச்சொல்லிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகாது

மன்ற + தடவுநிலை = மன்ற தடவுநிலை.

(g) தெளிவு, ஐயம், வினா, பிரிநிலை முதலிய பொருள்களில் வரும் ஏகார ஓகார இடைச்சொற்களுக்குப் பின்வரு மொழிமுதல் வல்லினமெய் மிகாது.

நீயே + சொல் = நீயே சொல்.
அவனோ + பெரியன் = அவனோ பெரியன்.

குறிப்பு:—இப்பொருள்களல்லாமல் முன்னிலையிடத்து முதல் வருகின்ற ஏகார ஓகாரங்கள் அளபெடுத்து நிற்கும்போது வருமொழிமுதல் வல்லினமெய் மிகும்.

ஏஎ + குமர = ஏஎக்குமர.
ஓஒ + கொற்றவ = ஓஒக்கொற்றவ.

(h) வேற்றுமை உருபுகளாக வரும் இடைச்சொற்களில், ஐக்குப்பின்னும், கு விற்குப்பின்னும், வருமொழிமுதல் வல்லினமெய் மிகுவதும், ஒடு,ஓடு,அது, அ, என்பனவற்றிற்குப் பின் மிகாததும், ஏழாம் வேற்றுமை யுருபுகளுக்குப்பின் மிகுந்தும் மிகாமலும் வருவதும் முன்னரே கூறப்பட்டிருக்கின்றன.



# இலஞ்சிப் பாவை.

[ 438-வது பக்கத் தொடர்ச்சி ]

## 16. மேகநாதன்.

*தீதுற்ற வற்றிலுமுள சில நன்மைகள் — ஆங்கிலப் பழமொழி.*

கலைக்குள்ளானவராய்ப் பிறந்திருக்கும் மானிடர் தந்தம் பணிகளி லூக்கமுள்ளவராகவும், வேடிக்கை விளையாட்டுகளிலும் களியாட்டிலு மிரவையெல்லாங் கழிப்பவர் வீடொன்றண்டென்று நினைந்து திரும்பவும், பிறர்பொருளை நாடியலையுங் கள்வர் தமக்குப் பகைவன் தோன்றினனென்று மறைவிடங்களில் ஒளிக்கவும், பரிதியஞ் செல்வன் விரிகதிர் பரப்பிப் பனியே புகையாய்ச் சூழ்ந்த உலகின்கட் டோன்றினான். அவனவ்வாறு தோன்றியதுதொட்டு அவன் கண்முன்னெதிர்ப்படுங் காட்சிகள் கணக்கில்லன. தாழ்ந்ததோர மனியிற் படுத்துக் காய்ச்சலால் அலைப்புண்ட பிணியாளி எரிகின்ற கண்களோடு அச்சமயம் மற்றவன் சுகமே நடமாடக் காண்கிறான்; தனக் கனிகலனை நிறைபிழந்த மாதாள் அவனது செங் கதிர்களைக் காணக் கண்ணும் உடலுங் கூசுகிறாள்; கடன் தந்தார்க்கெல்லாம் நாளை நாளை யென்று கூறவந்த கடனாளி அவனைக்கண்டு சிறைச்சாலையையும் விலங்கையு மெண்ணி வைகிறான். பிணிகொண்ட தன்பிள்ளையின் பாங்கர்க் கண்ணிமையாது விழித்திருக்கும் தாயும் உடனே எழுந்து படுக்கையைத் திருத்தி மெல்லியகுரலி லழும் சிதலைப்பிள்ளையைச் சிந்தைகொந்தனைத் தின்மொழிக விரம்பி அமைதிகொள்ளப் பண்ணுகின்றாள்.

விடிந்ததும், காலைமுரசமார்ப்ப, இரவெல்லாங்காத்து நின்றவர் இளைப்பாறும் வகை, வேறு சில காவலாளர் அவ்விட மெய்தினர். அங்கு மதிற்சுவரி லுள்ள சிறு துவாரங்களின்வழியே சென்ற இரவியின் கிரணங்கள், புகைசூழ்ந்த அறையில் மஞ்சள் நிறங்கொண்ட தீவர்த்தியின் ஒளியை மழுங்கச் செய்தன. அறையில் இரவெல்லாங் கள்ளுண்டும் களியாடியும் இளைத்ததனால் இறந்தவர்போல் மெய்ம்மறந்து உறங்கிக்கிடந்தவர் சிலர்; கண் விழித்துக் களைத்ததனால் முகமாறி வெறிகொண்டதுபோல் தோன்றியவர் சிலர். நறவமார்ந்தி காவலர்ந்ததென மீண்டு மதனைப் பருக வெழுந்தனர் பலர்.

அங்குக் கூடியவர் ஓரோகட்டைச் சேர்ந்தவர்களலர். பல ஊர்களினின்றும் வறியங் கருதிப் போரையே தொழிலாய்க்கொண்டு போந்தவரும்உண்டு. இவர்கள் யாவரும் பேசியது முன்னிரவு நடந்த போரைப் பற்றியே. சினமடக்கவும், நயமொழி நவிலவும் பழகாததால், மொழிகள் வறுத்தும் அளவு கடந்தும் பிறந்தன. அவரவர் கூறியவைகளே உண்மைகளென்றும், அடுத்துநின்றோர் புகல்வது பிழைகளென்றும் கூறி ஒவ்வொருவரும் தத்தம் உடைவாளிற்கைசெறித்தே தங்கள் மொழிகளை நிலைநிறுத்த முயன்றது கண்டார்க்கு நகையையே யுண்டாக்கக் கூடியதேனும்,அச்சமயம் அவர்களுக்குள் அது கெடுதியையே விளைவிக்கக் கூடியதா யிருந்தது.

அவர்களைச் சூழ்ந்து அமளி வடியுண்ட வீரர் பலர் சோயாத் துன்புற்றுக்கிடந்தும், அவர் நிலைமையைப் பாராது எழுந்தது, அருகிருந்தவீரர்தம்பெருங்குரல். இறுதியில், மேகநாதன் என்பான் ஒருவன் எழுந்து சில பேசத் தொடங்கினான். அவனோர் தென்னாட்டு வீரன்; அச்சமென்பதை யறியாதவன். வணக்கமென்ப தவனிட மிணங்கி யறியாது. நாடு போரற்ற காலத்துக் காடுசென்று வேட்டையாடி உய்பவன்.

சமரில் கலக்கமென்பதை யறியாச்சியம். அழிவுற்ற வேளை தளர்ச்சிகொள்ளாது முன்சென்று பொரும் போரேறு. நன்மைக்கும் தீமைக்கும் முதலில் நிற்பவன். அன்றனெழுந்து முன்னாள் விழாக் காலக்கணக்கிற்குமுன் நிறுத்தப்பட்டதற்குத் துன்புற்றுப் பின்வருமாறு சொல்லினான்:—

"கள்ளுண்ணலே சிறந்தது. ஒவ்வொருவரும் ஒரு பாத்திர மெடுத்துக்கொள்ளுங்கள். உண்மை நேசரென்ன ஒருங்குசேர்ந்து என் பின்னே பல்லவியாடுங்கள். மது உண்ணல் பொல்லாங்கைத் தருமென்று ஓதுவாரனைவரும் அறியாதாரே. சமயக் கணக்கரும் சாகுங்கிழவரும் சொல்வதைக் கேளாதீர்?முன்னவர்க்கது தொழில்; அதுவே பிழைப்பு. பின்னவர் உண்டு தெளிந்தவர். ஆகையால்நாம் செய்வதைச்செய்வோம்.

பெருமை கேளீர் பெருமை கேளீர்
அருமைக் கள்ளின் பெருமை யறியீர்!
(அனைவரும் பெருமை கேளீர்)
கவலை யுற்றுக் கலங்கு மாந்தர்
அவல மொழிய வாதர வளிக்கும்
உதயந் தொட்டே யுழைக்கு மேழையர்
இதயங் குளிர இன்ப மளிக்கும்
இல்லற நடாத்தி யிடுக்க ணுற்றோர்
அல்ல லகல வமைதி யூட்டும்
பீதி கொண்ட பேதையர் மனதை
வாதி யூதி யுறுதி யூட்டும்
இத்துணைச் சிறப்பு மிதற்கல துண்டோ
நித்தமு மிதையே நாடுவோ மியாமே.

வீரரனைவரும் ஆரவாரத்தோடும் பெரு நகை போடும் "நித்தமு மிதையே நாடுவோ மியாமே" என்று கூவிய முழக்கம் வானுற வோங்கிற்று. இதற்கு வெளிக்காவலாளன் 'யார்? நில்' என்னும் அரவம் இவர்கள் காதிற்பட, ஒருவன் எழுந்துசென்று அச் செல் துவாரத்தின் வழிநோக்கி ஓடோடியும் வந்து "நல்ல சேதி! நல்ல சேதி! ஏமாங்கதன் வெளியே வந்திருக்கிறான். கொட்டடா கொட்டு மேளம்! அவனோடே - அவனோடே - அவ அ. அ. அ - னோடே - ஒரு பெண்ணும் நட்டுவனும் வந்திருக்கிறார்கள்" என்றான்.

மேக:—"நல்லசெய்தி! நல்லசெய்தி! நல்லவேளையில் வந்தார்கள். இன்றைக்குச் சிறந்த சின்ன மேளம். விருந்து என்னுடையது என்னோடு எவராவது பந்துக்கு வந்தால் அவர்களுடைப் பந்து போடுவேன், சத்தியம்."

இம் மூர்க்கர்களிடையே வரவும் மனங்கூசிச் சுதஞ்சனை யாவிகுலைய முகத்தை முக்காடிட்டு மூடிப் பின்னடையவும், அவளைத் தாங்கி அவளுக்கு உறுதி கூறிக்கொண்டு, வீணையேந்திய கையனாய் ஆலாலசுந்தரன் வரவும், இவர்களுக்கு வழிகாட்டியாய் ஏமாங்கதன் முன்னடந்து வந்தான்.

மேக:—என்ன விசேடம்? என்ன நடந்தது?

ஏ:—யாதொன்றையும் அறியேன். பகல் பன்னிரண்டு மணிமுதல் இரவுவரைச் சண்டையிட்டோம். காட்டாளிகளிலும் நம்மவர்களிலும் இறந்தவர்களுக்குக் கணக்கில்லை. வெற்றி யாருடையதென்று இயம்ப இயலாது.

மே:—"நல்லது அண்ணா! இவர்களை எங்குச் சிறைகொண்டீர்? போர்க்கலக்கத்தி லிடும் கொள்ளையில் இதுவே மேலானது! உனக்கோ வயதாய் விட்டது. எங்கும் போர் முழக்கம். மனிதர் உடம்போ நிலையில்லாதது. நான் ஒன்று சொல்லுகிறேன் கேள். இனி நீ இராணுவத்தில் இருப்பது சரியன்று. ஒரு நடியையும் வீணையையும் கைப்பற்றி யிருக்கிறாய். இனியொரு நாயுங் குரங்கும் கொண்டு கொட்டுமேளத்தோடு கழைக்கூத்தனென நகரத்திலேயே நின்றுவிடு.

ஏ:—வீண் ஏளனஞ் செய்யாதே! இவர்கள் நீஎண்ணும் ஏழையர் அலர். போர் ஓய்ந்ததும் இவர்கள் மாறப் பிரபுவை நண்ணி, அச்சீமானோடு உரையாடிய பின்னர் அவர்என்னை யழைத்து அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேராமல் விரைவில் இவ்விடம் கொண்டு சேர்க்க உத்தரவளித்தார். ஆகையால் உனது விளையாட்டை விட்டுவிடு. அவர்களுக்கு ஒரு வரும் தீங்கிழைக்கக் கூடாது.

மே:—கேட்டீரோ இவன் பேச்சை! பெண்ணென்றால் பேயும் வாய்திறக்கு மென்பது இவனிடம் உண்மையாய் விட்டது. கிழவனும் கத்தியுருவி என்னோடு சண்டையிடுவான்போ லிருக்கின்றதே! ஏனையா! மானைக் களவாடிச் செல்வதென்றால் காட்டுச் சேவகனுக்கு ஒரு பங்கு கொடாமல் முடியுமோ? மாறனாகட்டும்! வேறெவனாகட்டும்! என் கூலியை நான் எடுத்துக்கொண்டுதான் விடுவேன்." என்று சொல்லி "மாயலாடி முத்து பெட்டார" என்னும் பாட்டைப் பாடிக்கொண்டு முன் சென்றான். இவனது வீரத்தையும் மூர்க்கத்தையும் முன்னரே அறிந்திருந்த ஏமாங்கதன், இவனுக்கு அஞ்சிப் பின்னிட, ஆலாலசுந்தரன் தன்னிடமிருந்த சிறு கத்தியை எடுத்துச் சினத்தோடு அவனை எதிர்க்கச் செல்லலும், சுதஞ்சனை தீரத்தோடு குறுக்கிட்டுத் தன் முகமூடியை நீக்கி நின்றாள். பெருமழை பெய்யுங் காலத்து, மேகங்கள் சற்றே விலகலும், தினமணி திகழ்வதையொப்ப, சொரிகின்ற கண்ணி னீரிடையே பொலிகின்ற அவள் முகம் தோன்றிற்று. முரடனைவரும் அவளெழில் கண்டு ஏதோவோர் வனதேவதை தம்முன் னுற்றதென வாய்பிளந்து நிற்க, மேகநாதனிடமும், வியப்பும் வெட்கமும் தோன்றின.

சு:—"வீரர்களே! நான் சொல்வதைக் கேளுங்கள், நானும் ஒரு வீரனுடைய பெண். என் தந்தை வீரர்களுக்குப் பெரும் நண்பர். பாசறையில், உங்களுக்கு உற்சாகத்தை யூட்டியும் செருவில் முன்னின்று படைக்கலங்களை யேற்றும் உங்கள் பொருட்டாய் உதிரஞ்சிந்தியும் உள்ள எனதுதந்தை தற்காலம் என்னைக் காப்பதற்கின்றி, குண்டுணிகள் தீமொழிகளால் நாடு துரத்தப்பட்டுச் சிறையிலும் அடைபட்டிருக்குங் காலத்து அவர் பெண்ணிற்கு வீராகிய நீங்களோ தீங்கிழைப்பது?

என்னலும், நன்மையிலும் தீமையிலும் முன்னிற்கும் மேகநாதன் உடனே வெட்கி "நாற்குணமும் நாற்படையாக் கொண்டு, வீரன் மகளென விளங்கவைக்கும் பேரெழிற் பாவாய்! பேதையேன் கூறியது மனத்துட் கொள்ளேல்! யானும் நாடு துரத்தப்பட்டவனாதலால் உனது துன்பங்களை யின்னதென அறிவேன். அந்தோகொடுமை! எனது கமலம் உயிரோடிருப்பின் உன்வயதே இருப்பாள். (கண்ணைத் துடைத்துக் கொண்டு) நண்பர்காள்! யான் சென்று நமது தலைவனை யழைத்து வரும்வரையில் இதோ நான் எறியும் என்கத்தியின் எல்லையை மீறி இந் நங்கைக்குத் துன்பூட்ட எவன் செல்கிறானோ அவன் மார்பில் என் அம்பு தைக்கும். அதோடு இந் நல்லாள் காதுகளில் தீமொழியொன்றும் செல்லாவகை யுமது நா காப்பீர்! காவாக்கால் சோகாப்பீர், சொன்னேன்" என்று கூறிச்சென்றான்.

விரைவில் அவரது தலைவனை ஓர் வாலிபன் அங்குற்று, இவர்களைக்கண்டு புன்னகை கொண்டான். வயதிற் கேற்றபடி, குறும்பும், களிப்பும், ஊன்றிய பார்வையும், களிகொள் மொழியு மவனிடங் காணப்பட்டனவேனும், அவன் உண்மையில் சீரிய நடையுடைப் பெருமகன். நாணத்தாலும் அச்சத்தாலும் நலியப்படாத அவன் பார்வை சுதஞ்சனையைச் சுருக்கிட்டதெனினும், அவளது நிலையும், அவள் நின்ற இடமும் இளைஞரெவர்க்கும் எளிமையாய் எண்ண இடந்தருமாதலால் வீரன்மேற் பழிகூற இடமில்லை.

தலை:—"வனப்புடை வனிதாய்! உனது தோற்றம் உன்னைப் பகைவராய மலைநாட்டாரது மகளெனத் தெரிவிக்கினும், உன் வரவு நல்வரவாகுக. யாருதவி நாடி நைந்தனை? உனக்காகப் போரிட்டு உன்னைச் சிறைகொண்டிருக்கும் அரக்கனை மடிக்க மன்னனது உதவி வேண்டுமோ. அன்றிச் சிறியேனுன என்னுதவி போதுமோ! விரைவி லுன் முத்தந்தோன்ற முறுவல் விளைத் தின்னுரை இயம்புவாய்"

இதைக் கேட்டவுடன் சுதஞ்சனைக்குச் சினம் மேலிட்டும், தனது நிலைமையை நினைந்து நெட்டுயிர்த்து "ஐயோ! நான் சீற்றங் கொள்வதிற் பயனில்லை! ஐயா! நான் அச்சம் நாண மென்னுங் காவல் கடந்து துன்பமே வழிகாட்டியாய்க் கொண்டு, சிறைப்பட்டிருக்கும் என்னருமைத் தந்தையின் ஆவியை, அரசனிடம் உயிர்ப்பிச்சைகேட்கத் துணிந்து இவ்விடம் வந்துள்ளேன். இதோ பாராய்! அரசன் விஜயவீரருக் களித்த கணையாழி. இதுகொண்டு, இக்காவல் கடந்து மன்னனது அவையை அடையலாகும் என்றவரெனக் குரைத்திருந்த துண்டு". கணையாழி கைக்கொண்ட வீரன், அது அரசனது பொறியுடை ஆழியெனக்கண்டு தலைவணங்கி, மிகவும் தாழ்மையும் வணக்கமுங் காட்டி "இதை யானறிவேன். சிறியோர் போன்று வேடம்மாறிய நல்லுடையில்லா நாரியர் திலகமே! உனது தோற்றங் கண்டு உனது உண்மைநிலை யறியாது எனது மனமொழி செய்கைகளால் ஏதேனும் பிழை யிழைத்துளேனேல், அதை மன்னித்தருள்வாய். என் வீரர் உன்னிடம் இழைத்த குற்றங்களுளவேல் சிறியரெனக் கொண்டு அவரிடம் கருணை காட்டுவாய்! அரசர் அபலாரைக் காணும் வேளை, அரண்மனை வாயில் திறக்கப்பட்டவுடன், உன் வரவை அவருக்கு அறிவிப்பேன். அதுவரை உனக்கேற்ற விடுதியில் நீ தங்க, உத்தரவளிப்பையேல், உன்னை யழைத்துச்சென்று, சேடியர் பலர் உனக்குப் பணிவிடைசெய்ய அமைப்பேன், வருக" என்றனன்.



அவ்விடம்விட் டகலுமுன், தன் னுயர்குடிக் கேற்ற வள்ளன்மை காட்டிச் சுதஞ்சனை, தன்னிடமிருந்த சிறு பொருளை யெல்லாம் வீரருக் குதவத் தந்தாள். அவ்ரவர் தங்கள் தங்கள் உயர்ச்சிக் கேற்பப் பொருளைப் பகிர்ந்துகொள்ள, மேகநாதன்மட்டும் நாணயத்தைத் தீண்டாதவனாய்க் கம்பீரத்தோடு "கர்வங் கொண்ட என் செயலை மன்னிப்பாய்! நான் பொன்னுக் கவாவினவ னல்லன். ஓ! என்னருமைச் சீமாட்டி! நானுரைத்த புன்மொழிகளை மறந்து என்னை மன்னிப்பாய். பணமற்ற வெறும் பையே எனக்கேற்றது. அதுவே சிறந்த பரிசென மதித்து அதைப் போற்றிப் பாராட்டுவேன். போர்வீரர் பல கடகங் களணியினும், நான் இதையே பெரிதாய் எண்ணிப் போர்முகத்தி லென் பாகையிற் செருகிச் சண்டை செய்வேன். நீ உனதெண்ணங்கள் நிறைவேறப்பெற்று நீடு வாழ்க!" என்று கூறிப் பையைப் பரிசாய்ப்பெற்று மறைந்தான். சுதஞ்சனையும் நந்தவனத்திடையே அழகுபெற அமைக்கப்பட்ட ஓரறையை யடைந்தாள்.

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்—1. மந்திரப்படலம்.

[436வது பக்கத் தொடர்ச்சி]

தந்தையு மைந்தனுங் கம்பரை நம்பார்.

அரசின் முறையிலும் அரண்மனை வாழ்க்கையிலும் அறமும் அன்புமல்லால் புறத்தொரு இன்பம் பெறற் குளதெனும் நோக்கமின்றித் தயரதன் தழைத்தன னாதலின் இராமனை நோக்கி,

பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொள
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க [வேண்டா
நினையல் வேண்டும்யா னின்வயிற்பெறுவதீதென்றான்.

[அரசனே பெரிய பாரத்தைத் தந்திரமாக என்னிடத்தில் சுமத்திவிட்டான் என்று எண்ணாதே. சூடுதற்குரிய சிறந்த கிரீடத்தைச் சூடி இந்த நல்ல அறத்தை நீ மேற்கொள்ளவேண்டும்; உன்னிடத்தில் யான் பெறலாவது இதுவே, என்றான்]

இன்னது கேட்ட இராமன் எந்நிலைய னாயினானென்பதைக் கம்பர்,.

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்தமப் பணிதலை நின்றான்.

[தந்தையாகிய தயரதன் அவ்விதம் சொல்லவும், தாமரை போன்ற கண்களையுடைய இராமன், அரசின்மீது ஆசைவைக்கவும் இல்லை, அதனை இகழவும் இல்லை. இராச்சிய பாரத்தைத் தான் ஏற்றுக்கொள்வதே கடன் என்று அறிந்தும், அரசன் எதனைக் கட்டளையிட்டானோ அதனைச் செய்வதே தனக்கு நீதியாகும் என நினைத்தும் அக்காரியத்திற்கு உடன்பட்டான்]

எனக் கூறுகின்றார். இச் சமரச நன்னிலைக் குரியதோர் செம்மல் இராமன் எனப் புலவர்பெருமான் கொண்டது இயற்கையே. ஆயினும் நாடகவுணர்ச்சி நன்கு முதிர்ந்த கவிகள் தம்மையே தம் பாத்திரங்களுக்குள் துறந்து மறைவரே யல்லாது தம் பொறுப்பிலே யாதும் விளம்பத் துணியார். பாத்திரங்கள் செய்தன இவையிவை, சொல்லியன இவையிவை யென்று இடம்புவதே இவர்கள் தொழில். பாத்திரங்களென்ற பான்மையில் தாமே செய்வன செய்து சொல்வன சொல்லிப் பிறகு கவிஞர் என்ற பெற்றியில் அச்செயல்களையும் சொற்களையும் முறைபடத்திரட்டித் தரும் திறமையால் நாடகக்கலைஞர்கள் தம் சிருஷ்டியின், உள்ளும் புறத்துமுள வப் பரமனையே ஒப்பர். இன்னபடி தோன்றாத் தெய்வங்களா யிருப்பது போக்கிச் சொற்களையும் செயல்களையும்இயக்குகின்ற உட்கருத்தைத் தம் முறையால் உணர்த்தப்புகுதல் நாடக நவிற்சியன்று. அவ்வாறு உணர்த்தத் தலைப்படுவரேல் அப்பொழுதெல்லாம் அப்புலவர்களது நாடகக்காட்சி சிறிது கலைந்து கிடக்கின்றதென் றன்னலாம். கலையின துருவம்போன்ற கம்பர் அளப்பரும் கடலெனப் பரந்த தன் காவியத்தினுள் இத்தளர்ச்சி நேராமல் காத்துக்கொள்கின்றனரேனும் இரண்டோரிடங்களில் தானொன்றுநினைக்கத் தன் பாத்திரங்கள் வேறொன்று நினைப்பதாயும் முடிகின்றது. தயரதனது தன்மையை முன் அரசியல்படலத்தில்,

நயந்தே கடந்தா னிரப்போர்கட லெண்ணினுண் [ணூல்
ஆய்ந்தே கடந்தா னறிவென்னு மளக்கர்வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்துமுற்றத்
தோய்ந்தேகடந்தான் றிருவிற்றொடர் போகவெளவம்

[இரப்பவர் கூட்டத்தை அவன் கொடுத்தே கடந்தான். அறிவென்னும் கடலை அவன் நுண்ணிய நூல்களை ஆராய்ச்சிசெய்தே கடந்தான். பகைவர் சமுத்திரத்தை அவன் தன் வாளினால் வெருவச்செய்தே கடந்தான். செல்வத்தால் பெறக்கூடிய போகம் என்னும் கடலை அவன் தன் கருத்தோடு ஆழ்ந்து அநுபவித்தே கடந்தான்]

என்று சாற்றினர். இதனில், இரப்போர்க் கீந்ததும் அரியநூல் ஆய்ந்ததும், பகைவரை வென்றதும் தயரதன் புரிந்த செய்கைகள். எக்கருத்துடன் இவைகள் புரியலாயின என்பதைச் செப்பிடப்புகாமல் கம்பர், நிகழ்ந்தன இவையென்று இயம்புவதோடு நிறுத்திக்கொண்டனர். இனி, போகத்திலும் ஆழ்ந்திருந்தான் என்றவரையில் உரைத்திருப்பாராயின், அதுவும் நிகழ்ந்த தொன்றைமட்டுஞ் செப்பியதா

கும். அவ்வாறின்றி. 'கருத்து முற்றத் தோய்ந்தனன்' என்றதால், அப் போகங்களில் தோய்ந்திருக்குந் தோற்றமே மட்டுமன்றிக் கருத்துடன் அதனைத் துய்த்திருக்குந் தன்மையன் தயரதன் என ஊகிக்கவுந் துணிந்தனர் கம்பர். ஆனால் தயரதனே,

> இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
> துனிவரு நலனெனத் தொடர்ந்து தோற்கலா
> நனிவரு பெரும்பகை நவையி னீங்கியத்
> தனியர சாட்சியிற் றாழு முள்ளமே

என அமயம் வாய்த்தவுடன் அதனை அடியுடன் மறுத்துவிட்டனன். இச் சொற்களைக்கேட்ட கம்பர் தன் ஊகத்தின் தவறைத் தெரிந்துகொண்டனர் போலும். கம்பருடைய கருத்தையுங் கடந்த பெருமையன் இத் தயாதன் அனைய வேந்தரைத் தோலாமொழித்தேவர், "எண்ணினர் என் அகப்படாத சிந்தையர்" என்று வெல்லுஞ் சொல்வேறில்லாவகை வருணித்திருக்கின்றார்.

கடனென்ற கொள்கையால் தான் அரசிருந்த நாட்களைக் கழித்துவந்த தயாதனைக் கருத்துமுற்றத் திருவில்தொடர் போகபௌவத்தில் தோய்ந்திருந்த தன்மையன் என உரைத்துவிட்டதன் தவறினைக் கண்டனர் கம்பர். உரைத்த சொற்களை மாற்றுதற்கோ வகையில்லை. என்செய்வதென நினைந்திருந்த அங்ஙனே, தன் பிழையைத் திருத்திவைப்பதற் குரியவோர் செவ்வி கம்பருக்கு வாய்த்தது. தனியரசாட்சியில் தாழுமோ ருள்ளத்தனென் றுணராது தந்தையை கெடிதுநா ளுண்ட எச்சிலில் அமிழ்த்திய தன் மதி அவலமாயிற் றென்றழிந்த சிந்தையராய கம்பர் அதனிற்கோ ரீடுசெய்வார்போல் மைந்தனை உயர்த்துவான் உட்கொண்டு விருப்பும் வெறுப்பும் அற்றவனுப் அவன் அரச வற்றத்தினைச் சுமந்திட இசைந்தனன் எனச் சாற்றினர். இதுவும் ஐயத்தால் அலைப்புறக்கூடியதாகி முடிந்தது. "புனையுமாமுடி நீபுனைதல்வேண்டும்" என்று வேண்டிய மன்னனுக்கு எதிர்நின்ற இராமனது எண்ணம் எவ்வகை அமைந்ததென்று அற்றைக்கு ஈரேழாண்டுகளுக்கப்பால் அவன் வாய்கொண்டே அறியலாகும். இந்திரசித்தன் எய்த பிரம்மாத்திரத்தா லுடைந்துகிடந்த தன்னருந் தம்பியையும் வானரத் துணைவர்களையுங் களத்தினிற்கண்ட இராமன் கரைசெயற்கரிய பருவரலெய்திப் புலம்புங்கால் இத்துணையிழவுந் தன்னால் நேர்ந்ததேயெனக் கழிபே ரிரக்கமுற்று,

> புன்றொ ழிற்புலை யரசினை வெஃகியென் பூண்டேன்
> கொன்றொ ருக்கினே னெந்தையைச் சடாயுவைக் [குறைத்தேன்
> இன்றொ ருக்கினே னித்தனை வீரரை யிருந்தேன்

[அற்பத்தொழிலிற் கடையாய இவ்வரசின்பால் போசைகொண்டதால் யான்பூண்ட பழி ஐயோ இத்தனையோ! என் தந்தையைக் கொன்று அழித்தேன். சடாயுவைத் தொலைத்தேன், இவ்வளவு வீரர்களையும் இன்றைக்கு அழித்து விட்டேன்.........இன்னும் யான் இருக்கின்றேனே!]

என்று அழுதனன் என்பது, பாசுரங்கள் ஏழாயிரத்து மூந்நூற்றுப் பதினைந்து படர்ந்தபின் தெரியநிற்கின்றது. "அருமை மைந்த, இப்பே ராசினை யதனொடு தொடர் திருவொடும் நீ அடைக" என்றரசன் இயம்பியகால் இராமன் 'காதலுற்றிலன் இகழ்ந்திலன்" என்று அவன் கருத்தறிந்தவர்போற் கம்பர் கழறியிருக்க, இந்நம்பியோ, "வெஃகினேன், இப் புன்தொழில் அரசினை அன்று வெஃகினேன்" என்னு மாற்றால் அக்கம்பரது கற்பனையைக்கடந்து உள்ளதை உரைத்துவிடுகின்றான். இதுவுமன்றிப் பின்னரும், "மண்மேல் வைத்த காதலின் மாதா முதலோர்க்கும் புண்மேல் வைத்த தீகெர் துன்பம் புகுவித்தேன்" என்றதும் இதுவே உண்மையென வற்புறுத்தும். இவைகளை நோக்குங்கால், நம் கவிஞர்பிரான் நாடகநினைவின் இரண்டறத் தன் பாத்திரங்களோடு கலந்து நிற்கும் நிலையின்நீங்கித் தன் தனிப்பொறுப்பில் ஒன்றினை நவில்தற்குத் துணியுந்தோறும் தானுந் தன் பாத்திரங்களும் வேறுவேறாகி மாறுபடுகின்ற செய்தியே எதிர்வந்து தோன்றலாகின்றது. வேண்டுதல் வேண்டாமை இல்லாததோர் நேர்மைபோக்கி இராமன் அரசினை வெஃகினனெனின் அஃதவற்குக் கடக்கருங் குறையேயாம். இதனை உணராதது அவனை ஆக்கியோற்குங் குறையேயன்றி வேறன்று. இன்னபடி இருதிறத்துங் குறையுடைய வொன்றினை ஓராது கம்பரும் கட்டுரைப்பார் கொலோ! "புலவர் பெரும, சிறியேங்கள் அறிவினைச்சோதிக்கவோ இச்சூழ்ச்சி புரிகின்றாய்? வெறுப்புடன் பொறுத்தனென் இவ்வரசினை என்பான் மன்னவன்; நீயோ, விருப்புடன் அனைத்தும் புசித்தனன் என்றனை. விரும்பினானலன் இராமன் இவ்வரசினை என்பாய் நீ; மற்று வெஃகினேன் என்பானவன். தந்தைக்கிருந்தபெருமையை நீ தாழ்த்தியதேன். அன்றி, நீ அளித்த பெருமைக்கு மைந்தன் ஆளாகாததும் ஏன்! நீதான் அயர்ந்தனையோ, அவர் தாம் பொய்த்தனரோ! இவ்விரண்டினு மொன்றேனுமியலுமென் றெங்ஙனம் எண்ணுகேம்! திங்களுள் தீபிறக்கக் கண்டாரிலர். உண்மையை உணர்த்துதி" என்று எந்தைகம்பர் அடியிணை தொழுது வேண்டுவோர்க்கு அவர் எதிர்மொழி யாது இயம்புவாரெனத் தேர்ந்துரைத்தல் எம்மனோர்க்கெளியதாமோ. எனினும் ஒன்றிங் குணர்தற் குளது. மாந்தர் உரைப்பனவற்றுள் மெய்யாக முடியாததெல்லாம் நெஞ்சறிந்த பொய்யாகவே ஆதல்வேண்டும் என்னு மெந்நியதியுமில்லை. இருந்துயரா லவசமுற் றழிவோர் தாம் இழைக்காத குற்றங்களைத் தமதாகப் பாவித்துப் பழியொன்று தம்மேல் சுமத்திக்கொண்டு சோர்வதும் இயற்கை. இன்று இவ் வீரரெல்லாம் ஆருயிர் துறந்துகிடப்பதை நோக்கி, அன்று அரசன் அளித்த நாட்டை வெறுத்துத் தான் வேண்டாவென்று மறுக்காததா லன்றோ இக்கொடுமை நேர்ந்ததென்னும் நினைவினால், மறுத்திடாதிருந்ததே வெஃகியதை ஒக்குமென்ற பான்மையில், இராமன் தன்னை இவ்வாறு இழித்துரைத்துக்கொள்ளலுங் கூடுமாகையால் "மண்மேல் வைத்த காதலினால் புன்தொழிற்புலை யரசினை வெஃகியே" முடிபுனைதற் கிசைந்தனன் என்று அவன் விளம்பியது வாய்மைக் கயலாக வியலாதென் றெண்ணித் தீரற்பாலதன்று. வெஃகித்தான் அரசினை வேண்டினனென உரைத்த பாசுரத்திற்குப் பின் நிற்கும் பாசுரத்தில் இராமன்,

> "தமைய னைக்கொன்று தம்பிக்கு வானரத் தலைமை
> அமையாநல்கினெ னடங்கலு மவிப்பதற் கமைந்தேன்"

என்று வாலியை வதைத்ததை வன்பழியாக் கருதிப் புலம்புகின்றனன். இச்செய்கையின் அமைதியை ஆராயுங்கால், இராமன்மனம் எங்ஙில நின்றதென எள்ளளவு மறிய வியலாவகை யாவும் அந்நாடகத்தில் நிகழ்ந்தன. கவிக்கூற்றாய்க் கம்பர் யாதுங் குறித்திலர். ஒளியம்பெய்த சேவகன் வாதித்த சொற்களாலும், இறுதியில் வாளாவிருந்துவிட்ட நீர்மையாலும், மாறுடப்பிறவி பொய்யாயெடுத்துள அவ்வுலக நாயகனது உள்ளம் கழிவிரக்கத்தால் ஒருவாறு தளர்ந்திருத்தல் வேண்டுமெனக்கொண்டு ஊகித்தது இங்கு இராமனது சொற்களால் நிலைநிறுத்தப்படுகின்றது. ஆயினும் இவன், வாலியின் திறத்தில் வைத்த நோக்கம் உண்மையெனத் தோற்றுங் காரணத்தினாலேயே முன் கோசலப் போரசினை வௌவ முயன்றதாய்க் கூறியதும் உண்மையேயெனக் கொள்ளவேண்டுமென்பதும் ஐயமற நிற்குமோர் அநுமான மாகாது.

புத்திரன் தன்மை யித்திறத்ததாயின் வேந்தனே போகத்தை விரும்பினன் அல்லன் என்னு மிரகசியத்தை, முரண்பட்டு நிற்கு மக் கவிக்கூற்றிற்கும் இவனது இவ் வாய்மொழிக்குமிடையே, ஓர்ந்துரைப்பதென்பது இயல்வதாய்த் தோன்றவில்லை. ஒதுவோருள்ளம் ஒருபாற்படாது ஊசலாட வைப்பதும் நாடகக்கவிகளின் நயங்களின் ஒன்றாகு மென்னற்கு ஆங்கிலக் கவியாசு ஷேக்ஸ்பியர் நற்கரி கூறுவார்.

ஆவதாகுக. மன்னனுக் தன்னாசினைத் தந்தனன்; மைந்தனுற்றகம் மறித்திலன், பொன்னெடுங் கோவில் புக்கெய்தினன். பின்னர்த்தயாதன் அவையிருந்த வேந்தர்தம் கருத்தினையும் ஆய்ந்துணரப் புகுந்தபோது, இரட்டர் விதர்ப்பர் கலிங்கர் துருக்கர் குருக்கள் மிலேச்சர் சிங்களர் சேதியர் விராடர் தெலுங்கர் சேரர் சோழர் பாண்டியர் முதலிய வேந்தர்கள், இராமனது வீரத்தையும் தயாதன்தகவையும் இருவர் அறத்தையும் வியந்துபாராட்டித் தம்ஒகையை விளம்பினர். மன்னவர் இன்னணந் தனித்தனியுரைத்ததாய்க் கூறும் பாசுரங்கள் பலபிரதிகளில் காணப்படவில்லை. எனினும்,

> கேடகல் படியினைக் கெடுத்த கேடிலாத
> தாடகை வலிக்கொரு சாமன் றேவிய
> ஆடக வில்லிகே யாக பாரெனுத்
> தோடவிழ் மலர்முடித் துருக்கர் கூறினர்

என்னுமிச்செய்யுள் தெரிந்தோ தெரியாமலோ சிறிது நகை விளைக்கக்கூடியதா யிருக்கின்றது. தாடகைப் பெயர்த் தையலாளைக் கொன்றஇச்செய்தியைக்கொல்வித்த கோசிகனன்றி வேறெவரும் குறிப்பதற்கும் வெள்கி வாளாவிருக்கத் துருக்கர்வேந்தனே பாராட்டிப் பேசினனென்பது ஒருபுறமிருக்க, "வில்லிக்கே யாகப் பார்" என்றிருக்கவேண்டியது மெய்யெழுத்துக்கள் நீங்கி, "வில்லிகே யாக பார்" என வரையலாயது வரைந்தவர் கைப்பிழையோ, துருக்கர் தமிழ்ப்பிழையேயோ அறிகிலேம்

## வர்த்தமானம்

துருக்கி மாதர் நிலைமை:—துருக்கியிலுள்ள மாதர்களுக்கு ஓட்டுரிமை கொடுக்கப்பட்டதென்றும், இன்னும் சிறிதுகாலத்தில் சட்டசபைகளில் ஸ்தானம் வகிக்கும் உரிமை கொடுக்கப்படும் என்றும் துருக்கிச் செய்தி கூறுகின்றது.

***

இரங்கூன் கலவரம்:—இரங்கூனில்நடந்த தொழிலாளர் கலவரத்தில் இதுவரையில் 174-பேர்க்கு மரணம் ஏற்பட்டுள்ளதென்று தெரிகின்றது. சமரஸ முயற்சி நடந்து வருவதால் சீக்கிரத்தில் குழப்பநிலையில் மாறுதல் ஏற்படலாம் என்று தெரிகின்றது

***

நாஷனல் இன்ஷூயரன்ஸ் கம்பனியின் இருபத்து மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் டைரக்டர்ஸ் ரிபோர்ட் எமக்கு அனுப்பப்பெற்றோம். அதனின்று, இந்தக்கம்பனி எவ்விதக் குறைவுமின்றி நாளுக்குநாள் வளர்ந்துவருகின்றதென்பதைக்காணப் பாலிஸி ஹோல்டர்களும் மற்றுளோர்களும் மிகவும் மகிழ்வார்கள். கல்கத்தாவில் ஹெட்டாபீஸுடைய இந்தக்கம்பனியின் சென்னை பிரான்சை, அதன் காரியதரிசி ஸ்ரீமான் K. S. கோபாலையா அவர்கள், எத்துணை நன்னிலைக்குக் கொண்டுவந்திருக்கிறாரென்பது யாவரு மறிந்ததே.

***

சர். போன். அருணாசலந்துரை அவர்களது ஜீவிய சரித்திரச் சுருக்கம் பாநடையில் பாடப்பெற்ற புத்தகம் ஒன்று எமது பார்வைக்கு வந்துளது. இதனை ஆக்கியவர், யாழ்ப்பாணம், நவாலியூர் தமிழ்ப்புலவர் திரு. க. சோமசுந்தரம் பிள்ளை ஆவார். இப்புலவரையும், பாட்டுடைத் தலைவரையும் இலங்கைத் தீவில் மாத்திரமேயன்றி இந்தியாவிலும் பெரும்பாலோர் நன்கு அறிவர். எனின், இச்சிறுநூலில் அடங்கிய பாசுரங்கள் சிறப்பாக அமைந்திருத்தல் மகிழ்தற்பாலதேயன்றி வியத்தற்குரியதன்று. விலை. 20 சதம். வேண்டுவோர், A. K. வேலுப்பிள்ளை, மிருசுவில், கண்ணுவ, வலோன் வின்ற விலாசத்திற் கெழுதிப் பெறலாம்.

***

அவசரச்சட்டங்கள்:— சென்ற வார இறுதியில் ராஜப்பிரதிநிதி இரண்டு அவசரச்சட்டங்களை அமைத்தனர். சட்ட விரோதமாக நடக்குமாறு ஜனங்கள் தூண்டுதலைத் தடுப்பதற்கான 1930-வருஷத்து அவசரச்சட்டம் ஒன்றும், ஜனங்களைப் பயமுறுத்திப் பகிஷ்கரிப்பதோ அல்லது பகிஷ்கரிக்கத் தூண்டுவதோ ஆயசெயல்களைத்தடுப்பதற்கான 1930-வருஷத்து அவசரச்சட்டம் மற்றொன்றுமாகும். இச்சட்டங்களைப்பற்றிப் ராஜப்பிரதிநிதி விடுத்துள் அறிக்கை வருமாறு:—"சமீபத்தில் கூடிய காங்கிரஸ் கார்யக் கமிட்டியில் குறிப்பிட்ட சிலவிடங்களில் குறிப்பிட்ட சிலவரிகளை மறுக்குமாறுஜனங்களைத் தூண்டுவதற்கான சமயம் வந்துவிட்டதெனத் தீர்மானம் செய்யப்பட்டது. இந்த இயக்கம் ஏற்படின் நாட்டில் அமைதி குலையும். எனவே இச்சட்டம் அவசியமாயிற்று. இது, நிர்வாகத்தைக் குலைக்கும் நோக்கத்தைக் கொண்ட இயக்கத்தைத் தடுப்பதில் உபயோகப்படுத்தப்படும். இந்த இயக்கம் பரவுமானால் நாட்டின் பொருளாதாரநிலை பாதிக்கப்படும். ஒழுங்கான முன்னேற்றத்தையும், நிரந்தரமான அரசாங்கத்தையும் விரும்பியே இது செயப்பட்டுள்ளதாதலால் எல்லோராலும் இது ஆதரிக்கப்படுமென்று நம்புகின்றேன்.

"இரண்டாவது சட்டம், அரசாங்க ஊழியர் பகிஷ்காரத்தைத் தடுக்கும் நோக்கங் கொண்டது. சட்டமறுப்பு இயக்கத்திற்கு ஏற்பாடு செய்பவர், கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களைத் தங்களுடைய பதவிகளை ராஜினாமாச் செய்யுமாறு தூண்டியும் அப்படிச் செய்ய மறுத்தால் பகிஷ்கரித்தும் வருகின்றனர் இப்படிப் பயமுறுத்தியும் துன்புறுத்தியும் வருவது அரசாங்கநிர்வாகத்தைப் பாதிக்கும். ஆகவே இச்செயல்கள் ஜனாநன்மையை ஒட்டித் தடுக்கப்படவேண்டும். எனவே இச்சட்டமும் நிதானபுத்தி உடையவர் எல்லாராலும் ஆதரிக்கப்படுமென்று நம்புகின்றேன்."

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப் பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரீடரிக்ஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1 கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகயிலை முதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::





## எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரைவும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இனியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ண குமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை



Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.

INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS

INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS

"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS

"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE

Low rates of premia. Invested Funds over Rs. 1,47,000,00

Prompt settlement of Claims. Claims paid exceed Rs. 67,000,00

*IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply to the Company to-day.*

R. G. DAS & Co, OR K. S. GOPALAYYA
*Managers.* *Branch Secretary, Lone Square, Broadway, Madras.*



ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5—8—0. V. P. Charge Extra.

*MANAGER:—*
*KALANILAYAM,*
*11, VELLALA STREET,*
Purasawalkam, MADRAS.

KALANILAYAM. REG. NO. M, 2324.

## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமூக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப்பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்திய்தேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | |
|---|---|---|
| உள்நாடு சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு " | " | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | அணா | 0 4 0 |

விலாசம் :—'பாரதி' கார்யாலயம்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப்பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு

EDUCATIONAL PUBLISHING CO.

Nungambakam.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!! 60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்த்துளது. 800-பக்கம். அழகிய சிமைகாலிகோ 'ைபண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,

8/2, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்பராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,

சே. கிருஷ்ணமாசாரியார்,

வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,

11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய

கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார். போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில் உயர்தரக் கட்டடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர் :—"கலா நிலயம்",

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)